இயல் 2

# பெண்ணியமும் பாரதியாரின் காலச்சூழலும்

# பெண்ணியமும் பாரதியாரின் காலச்சூழலும்

2.0. முன்னுரை

2.1. பெண்ணியம்

2.2. பெண்ணியத்தின் தோற்றம்

2.3. பெண்ணியம் விளக்கம்

2.4. பெண்ணிய வகைகள்

2.4.1. மிதவாதப் பெண்ணியம்

2.4.2. தீவிரவாதப் பெண்ணியம்

2.4.3. சமதர்மப் பெண்ணியம்

2.4.4. பண்பாட்டு பெண்ணியம்

2.4.5. ஆன்மீகப் பெண்ணியம்

2.5. பெண்ணியம் பற்றிய பெண்ணிய இயக்கவாதிகளின் கருத்து.

2.6. பெண்ணியம் பற்றிய சிந்தனைகள்

2.7. மேலை நாடுகளில் பெண்ணியத்தின் தோற்றம்.

2.7.1. பெண்ணியம் தோன்றக் காரணங்கள்

2.7.2. மேலைநாட்டுப் பெண்ணியம்

2.8. இந்தியப் பெண்ணியம்

2.8.1. இந்தியப் பெண்ணியத் தோற்றமும் வளர்ச்சியும்

2.8.2. இந்தியாவில் பெண்ணுரிமை இயக்கங்கள்

2.8.3. பெண்கள் முன்னேற்றத்தில் சட்டங்களின் பங்கு

2.9. தமிழில் பெண்ணியம்

2.9.1. சங்கக் காலத் தமிழகத்தில் பெண்ணியம்

2.9.2. சங்கக் காலத்திற்குப் பின் பெண்ணியம்

2.9.3. தமிழ்ப் பெண்ணிய வளர்ச்சி

2.10. இந்தியப் பெண்களால் பெண்களுக்கான அமைப்புகளின் தோற்றம்

2.11. பாரதியின் பெண்ணியம் பற்றிய அறிவாற்றல்

2.11.1. தமிழ் இலக்கிய அறிவு வள்ளலாரும் பாரதியும்,

2.11.2. வடமொழிப்புலமை

2.11.3. ஆங்கில அறிவு - விட்மன் ஷெல்லி.

2.12. பாரதியார் வாழ்க்கை

2.13. பாரதியின் பெண்ணியப் பார்வை

2.14. பாரதியாரின் அரசியலறிவு

2.15. பாரதியின் சமூக அறிவு

2.16. பாரதியின் அழகியல் உணர்வு

2.17. சமயத் தத்துவம்

2.18. பாரதியின் காலச்சூழல்

2.19. தொகுப்புரை

# பெண்ணியமும் பாரதியாரின் காலச்சூழலும்

## 2.0. முன்னுரை

பெண் என்று பிறந்துவிட்டாலே அவள் பேசப்படுபவளாக, வாதிக்கப்படுபவளாக, பிரச்சனைக்குரியவளாகக் கருதப்படுகிறாள். அவளது பிறப்பு, கல்வி, வளர்ப்பு, பாதுகாப்பு, திருமணம், மரணம் என்று அனைத்துமே பட்டிமன்றத் தலைப்பாக்கப்பட்டு விட்டன. கலாச்சார விஷயங்கள் ஒரு தெளிந்த நீரோடையைப் போல் பெண்மையை ஒரு வாதத்திற்குரிய பொருளாக்கி விடுகிறது.

ஏழை மிக ஏழையாகிக் கொண்டிருக்கிறான். பணக்காரன் மிகப் பணக்காரனாகிக் கொண்டிருக்கிறான். குறைந்த அளவிலேயே ஏழை பணக்காரனாகிறான். அதுபோலவே பெண்கள் முன்னேற்றமும், ஒரு சாரார் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். ஒரு சாரார் பின் தங்கிய நிலையிலேயே உள்ளனர். முன்னேறிக் கொண்டிருக்கும் பெண்களின் முன்னேற்றத்தை அகம், புறம் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

கல்வி, வேலை, பொருளாதாரத் தனித்துவம், வெளி உலக ஈடுபாடுகள் அனைத்தும் அவளது புறம் எனில், வீடு, கணவன், குடும்பம், சொந்தம் இவையெல்லாம் அவளது அகம் ஆகிறது. அலுவலகத்தில் பத்து பேருக்கு உத்தரவிடக் கூடிய நிலையிலுள்ள பெண், உயர்மட்ட அளவில் முடிவுகளை எடுத்து செயல்படுத்தும் திறமை மிக்க பெண், தனக்குத் தானே விதித்துக் கொண்டுள்ள அதீதமான கலாச்சாரக் கட்டுப்பாடுகளால்

அனைவர்க்கும் வளைந்து கொடுத்து நிமிர்ந்து நிற்க முடியாமல் தடுமாறவே செய்கிறாள். பெண்ணின் இந்த அகம் முன்னேற இன்னும் சில காலம் தேவைப்படும் என்று கூறலாம்.

உலகம் ஆண், பெண் இருவராலும் ஆக்கப்பட்டது. ஆண், பெண் சேர்ந்த ஒன்றே உலகம் ஆகும். இவ்வுலகில் பெண்ணுரிமை என்பது ஆணுடன் போர் புரிவதன்று ஆணுடன் வாழ்ந்து அன்பை வளர்ப்பது ஆகும். எந்த நாட்டில் பெண்மைக்கு மதிப்பும் பெருமையும் இருக்கின்றதோ அந்த நாடு முன்னேற்றம் பெற்ற நாடு ஆகும்.

"பெண்களின் நிலை உயரும் போதுதான்
ஆண்களின் நிலை உயரும் இவ்விருவரின்
நிலையும் உயரும் போது தான் மனித சமுதாயத்தின்
நிலையே உயர்ந்து விடும்"[1]

எனக் காந்தியடிகள் பெண்களின் உயர்வு நிலையும் சமுதாயநிலையின் உயர்வுக்குக் காரணம் என்று கூறுகின்றார்.

ஆனால் இன்றைய சமுதாயம் ஆணாதிக்கச் சமுதாயமாக உள்ளது. எனவே பெண்களுக்குச் சம உரிமையோ, சமுதாய மதிப்போ கிடைக்காமல் போகிறது. பெண்ணுரிமை என்பது பேச்சளவில் உள்ளது. பெண்கள் பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தப்படுகின்றனர். முறைசாராத் தொழில்கள் பாலியல் அடிப்படையில் பணிப்பாகுபாடு செய்வதால், கூலியிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. குடும்ப அமைப்பு முறை, பெண் குழந்தைகளின் வளர்ப்பு முறை, திருமண முறை போன்றவை பெண்களுக்குப் பாதுகாப்பில்லாத அச்சவுணர்வைத் தோற்றுவிக்கின்றன. பெண்களே

பெண்களை வெறுத்து ஒதுக்கும் நிலையும், பெண் சிசுக்கொலையும் சமுதாயத்தில் காணப்படுகின்றன.

1975 -ஆம் ஆண்டு உலகப் பெண்கள் ஆண்டாகத் தேசியப் பொதுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுப் பெண்களின் முன்னேற்றத்திற்கு அடிகோலப் பட்டது. அது முதற்கொண்டு பெண்ணியம், பெண் விடுதலை, பெண்ணுரிமை, பெண் சுதந்திரம் என்றெல்லாம் அறை கூவல்கள் அகிலமெங்கும் ஒலித்துக் கொண்டு இருக்கின்றன. ஆயினும் பெண்கள் ஆண்டு அறிவிக்கப்பட்டு கால் நூற்றாண்டாகியும் பெண்ணியம் சமுதாயத்தில் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதே உண்மை நிலை. இந்தியப் பாரம்பரியத்திற்குப் பெண்ணியம் தேவை தானா என்பது ஆண்களிடையே மட்டுமல்ல பெண்கள் மத்தியிலும் கேள்விக் குறியாகவே நிற்கிறது.

"பெண்ணியம் என்பது பெண்களைக் குடும்பத்தை விட்டு வெளியே வரத் தூண்டுகின்ற கோட்பாடு என்று பெண்களே விமர்சிக்கின்ற சூழ்நிலையில் பெண்ணியம் பேசுவதைவிடப் பெண்ணியத்தைச் சரியான பாதையில் கொண்டு செல்லவும் சமூகம் அதைப் புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்வது அடிப்படையான தேவையாகிறது"[2] இதனடிப்படையில் பெண்ணியச் சிந்தனைகளும், கோட்பாடுகளும் அத்தகையத் தோற்றத்தினையும் வளர்ச்சியினையும் பெற்றுள்ளது என்பதைக் காணலாம்.

## 2.1. பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண் விடுதலையை மையமிட்ட மேல்நாட்டுச் சிந்தனைகளின் தாக்கமாகும். 17,18-ஆம் நூற்றாண்டில் மேலைநாட்டில் பரபரப்பான பெண்ணியச் சிந்தனை இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் தலை தூக்கியது. "பெண்ணியம் என்ற சொல் மிக அண்மைக் காலத்தில் தோன்றி வளர்ந்து வருகிறது. அது பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும். அத்தோடு பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும், அவள் ஆணுக்குச் சமமானவள் எனும் உயர் நெறியை நிலைநாட்டும் நோக்கத்தைக் கருவாகக் கொண்டு இயங்குகிறது"[3] எனப் பிரிட்டானியாக் கலைக் களஞ்சியம் பெண்ணியத்திற்கு விளக்கம் கூறுகிறது.

தேவதத்தா, "சமூகத்திலும் வேலைத்தளத்திலும், குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்மையின் உணர்வுகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வு பூர்வமான நடவடிக்கையாகும்".[4] என விளக்கம் அளிக்கிறார்.

பெண்ணியம் என்பது பெண்களுக்கு மட்டும் சமத்துவம் வேண்டும் என்பதல்ல. ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான நேர்மையான சமத்துவம் உள்ள சமுதாயம் உருவாக வேண்டும் என்பதே பெண்ணியத்தின் அணுகுமுறை. அதில் ஆணும் பெண்ணும் பாலினப் பாகுபாடுகள் இன்றி மனிதர்களாக மதிக்கப்படுதல் வேண்டும். பெண்கள் சமூகத்திலும் அலுவல் நிலையிலும் வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சி தோன்ற வேண்டும்.

அவ்வாறு நசுக்கப்படும் நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுதல் வேண்டும் என்பதே பெண்ணியத்தின் வாதமாகும். சமூகத்தில் ஆணாதிக்கம் முதலில் குடும்பத்தில் தொடங்குகிறது. குடும்பத்தில் ஆண்கள், பெண்களைச் சமமாக -நிகராக மதிக்கும் போக்கு தோன்ற வேண்டும். பின்னரே அது சமூகம், நாடு, தேசியம் என்ற அளவில் வளர்ச்சியடைய முடியும்.

## 2.2. பெண்ணியத்தின் தோற்றம்

"பெண்ணியம் (Feminism) என்பது பெண்ணை ஓர் ஆய்வுப் பொருளாக்கிப் பார்க்கின்ற கோட்பாடு ஆகும். இ∴து ஒடுக்கப்பட்ட பெண்களிடமிருந்து ஒரு சமூகப் பிரச்சினையாக உருப்பெற்று, அதன் ஒரு பரிணாம வளர்ச்சியாக இன்று இலக்கியத் திறனாய்வுக் களத்தில் நுழைந்துள்ளது."[5]

'Feminism' என்ற ஆங்கிலச் சொல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டது. 18-ஆம் நூற்றாண்டிலேயே ஆங்காங்கு பெண் விடுதலை சிந்தனை எழுச்சி பெற்றிருந்தது என்றாலும், பெண்ணியம் தனி ஒரு கோட்பாடாக வலுப்பெற்றது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தான் இக்கோட்பாட்டின் தோற்றம் பற்றி இரு வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன.

முதலாளித்துவத்திற்கு எதிராக எழுந்த மார்க்சிய வர்க்கப் போராட்டத்தில், ஆதிக்க வெறியர்களை எதிர்க்கும் நோக்கில் அதன் ஒரு பகுதியாக ஆண் ஆதிக்கத்திற்கு எதிராகவும், பெண் ஒடுக்கு

முறைக்கு எதிராகவும் குரல் எழுப்பப் பட்டது. இதுதான் பெண்ணியத்தின் வேர் என்றும், இதிலிருந்துதான் பின்பு 'பெண்ணியம்' தனி ஒரு கோட்பாடாக உருப்பெற்றது என்றும் மார்க்சியப் பெண்ணியவாதிகள் கூறுகின்றனர்"[6]

ஆனால் "Pure Feminist" என்று சொல்லக் கூடிய தூய பெண்ணியவாதிகள், பெண்ணியம் என்பது '19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலை நாடுகளில் பகுத்தறிவின் அடிப்படையில் ஆண்களுக்குச் சமமான உரிமைகள் வேண்டி பெண்கள் எழுப்பிய குரலில் தோற்றம் பெற்றது' என்று கூறுகின்றனர். தோற்றம் எதுவானாலும் இக்கோட்பாடு பெண்ணிய அமைப்புகளால் (Feminist movement) வளர்ந்தது. பெண்கள், தங்கள் மீது ஏவிவிடப்பட்டிருந்த அடக்குமுறைக்கு எதிராக, தீர்க்கமாக எழுப்பிய குரலே பெண்ணியத்திற்கு எழுச்சியூட்டியது.

### 2.3. பெண்ணியம் விளக்கம்

"ஆங்கிலத்தில் 'Feminism' என்று வழங்கும் கலைச் சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுகிறோம். இந்த ஆங்கிலச் சொல், பெண்ணைக் குறிக்கும் Femina என்ற இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து தோன்றியது. பெண் என்னும் சொல் 'பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள்' என்று பொருள்படும். பெண்ணியம் என்ற இச்சொல், 1890-இல் இருந்து பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளைப் பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகின்றது. எனினும் இருபதாம் நூற்றாண்டிலேயே இச்சொல் பெருவழக்கில் வந்தது. தமிழில், பெண்ணியம், பெண்நிலை வாதம், பெண்ணுரிமை ஏற்பு என்ற சொற்கள் இதற்குரிய சொற்களாக வழங்கி வருகின்றன."[7]

பெண்ணியத்திற்கு உலகில் உள்ள அனைத்துச் சமுதாயங்களுக்கும் பொருந்தும் படியான, முக்காலத்திற்கும் உரிய ஒரு விளக்கத்தைக் கொடுக்க முடியாது. இதன் விளக்கம் ஒரு சமுதாயத்தின் வரலாறு, பண்பாடு, இவற்றைப் பற்றிய உணர்வு, நோக்கு, செயல் இவைகளைப் பொறுத்து மாறுபடும். பெண்ணியத்தின் தொடக்க காலமாகிய 17-ஆம் நூற்றாண்டில் இச்சொல் குறித்த கருத்துகளிலிருந்து 1980-இல் இச்சொல் குறிக்கும் கருத்துக்கள் மாறுபட்டிருக்கும். இதைப் போன்று உலகில் பல்வேறு சமூகத்தினரும், பல்வேறு நாட்டினரும் இச்சொல்லைப் பல்வேறு வரையறைகளுக்கு உட்பட்டக் கருத்துக்களைக் குறிக்கப் பயன்படுத்துகின்றனர்.

பெண்ணியம் என்னும் பொழுது, அமெரிக்கப் பெண்ணியம் இந்தியப் பெண்ணியத்தைப் போல இருப்பதில்லை. அந்தணர் கருதும் பெண்ணியம் ஆதி திராவிடர் கருதும் பெண்ணியத்தைப் போல இருப்பதில்லை. ஓர் இனத்து மக்களிடையேயும் கூட அவர்களுடைய கல்வி, விழிப்புணர்ச்சி, ஆண் பெண் வேறுபாடு, ஆண் ஆதிக்கம் இவற்றைப் பொறுத்து இதன் விளக்கம் மாறுபடும். எனவே சுரண்டலற்ற சமுதாயத்தை அமைக்க விரும்பும் பெண்ணியம், மேற்கூறிய அடிப்படைகளைப் பொறுத்து அதன் போராட்டங்களிலும் மாறுபடும்.

எனினும் பெண்ணியம் என்ற சொல்லுக்குத் தெற்காசிய நாடுகள் "பெண்கள் சமூகத்திலும், அலுவல்களிலும், வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும், அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும், பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயற்படும் முயற்சிகளும்" என்ற விளக்கத்தைக் கூறுகிறது எனவும். பெண்ணியம் பற்றிய விளக்கத்தை டாக்டர். ச. முத்து சிதம்பரம் கூறுகின்றார்.

"Feminism என்ற சொல்லுக்கு நேர் தமிழ்ச் சொல்லாகப் பெண் விடுதலை இயக்கங்கள் 'பெண் நிலை வாதம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர். இச்சொல் சமூகவியல் நோக்கில் எடுத்தாளப்பட்ட சொல்லாகும். இதனையே கல்வியாளர்கள் (academicians) பெண்ணியம் என்ற சொல்லால் குறிக்கின்றனர். பெண் நிலை வாதம் என்ற சொல் பெண்களை விவாத நோக்கில் பார்க்கிறது. பெண்ணியம் என்ற சொல் அவர்களை ஆய்வு நோக்கில் பார்க்கிறது."[8]

'பெண்ணியம்' என்ற கோட்பாடு பெண்களை நவீன மயமாக்கும் சிந்தனையின் எழுச்சி. இக்கோட்பாட்டை டாக்டர். பிரேமா அவர்கள் கீழ்க்கண்ட வரையறைக்குள் கூறுகின்றார்.

1. பெண்ணியம் என்பது பெண்கள் மீதான வரலாறு, மதம், பொருளாதாரம், பண்பாட்டு ரீதியான ஒடுக்கு முறையின் அகநிலை உண்மைகளை ஆராய்வது. அதாவது பெண்கள் மீதான ஒடுக்கு முறையின் பல்வேறு பரிணாமங்கள் அதற்கான தீர்வுகள், அதை அடைவதற்கான வழிமுறைகள் இவற்றை ஆராய்வதாகும்.

2. சமூக அரசியல், பொருளாதார அலுவலக அமைப்புகளில் ஆண்மேலாதிக்கத்தை இனம் காட்டுவது.

3. சமூகத் தோற்றத்தை ஆராய்வது. அதாவது, தாய்வழிச்சமூக அமைப்பிலிருந்து பின்தந்தை வழிச் சமூக அமைப்பு தோற்றம் பெற்றதையும், அம்மாற்றத்தின் விளைவுகளையும் எடுத்துரைப்பது.

4. பெண்கள் சமத்துவம், மதிப்பு என்பதை வீட்டிற்குள்ளேயும் வெளியேயும் பெறுவதற்கான போராட்டமாகும்.

5. பெண்ணியம் என்பது பெண்ணை ஓர் உயிரி எனச் சமூகம் அங்கீகரித்து, அவளுக்கு ஆணுக்குச் சமமான உரிமையும் சுதந்திரமும் கொடுக்கத் தூண்டும் கொள்கையாகும்.

மேற்கூறிய விளக்கங்கள் எல்லாம் சமுதாயத்தின் சகல படிநிலைகளிலும் பெண் விடுதலையைக் கோருவதே பெண்ணியத்தின் அடிப்படை என்றக் கருத்தைக் கொண்டுள்ளதாக விளக்கம் தருகிறார்.

## 2.4. *பெண்ணிய வகைகள்*

"பெண்ணியக் கோட்பாடு தாம் கொண்ட கொள்கைப் பிடிப்பிற்கேற்ப பல்வேறு வகைகளைக் கொண்டுள்ளது. மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminism) தீவிரவாதப் பெண்ணியம் (Redical Feminism), சமதர்மப் பெண்ணியம் (Socialist Feminism) என்பனவற்றை அடிப்படைப் பிரிவுகளாகச் சுட்டலாம். இந்நாட்டு சூழலுக்கு ஏற்ப வளர்ந்த பெண்ணியக் கோட்பாடு 'இந்தியப் பெண்ணியம்' (Indian Feminism) என்று சொல்லப்படுகிறது"[9] இவ்வாறு மூன்று வகையான பெண்ணிய வகைகள் பற்றிக் கூறப்படுகின்றது.

வரலாற்றுப் பின்னணியில் பெண்ணியத்தைப் பின்வரும் நான்கு வகைகளாகப் பகுப்பர். அவை,

"1. தீவிரப் பெண்ணியம் (Redical Feminism)

2. மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminism)

3. சமதர்மப் பெண்ணியம் (Socialist Feminism)

4. பண்பாட்டுப் பெண்ணியம் (Cultural Feminism)

இவற்றோடு புதுவதாக மற்றொன்றையும் இணைத்து,

5. ஆன்மீகப் பெண்ணியம் (Spiritual Feminism) என்று ஐந்து வகைகளாகக் கொள்ளலாம்.

வகைமை அடிப்படையில் பெண்ணியம் பின்வருமாறு பகுக்கப்பட்டுள்ளது.

1. தலைமை வேண்டாப் பெண்ணியம் (Anarcha Feminism)

2. மகளீர் முன்னேற்றம் (Career Feminism)

3. பண்பாட்டுப் பெண்ணியம் (Cultural Feminism)

4. மனிதவள மேம்பாட்டுப் பெண்ணியம் (Engenic Feminism)

5. பெண்மையமிட்ட பெண்ணியம் (Gynocedtric Feminism)

6. மானுட நேயப் பெண்ணியம் (Humanist Feminism)

7. ஏகாதிபத்தியப் பெண்ணியம் (Imperial Feminism)

8. தனிமனிதப் பெண்ணியம் (Individual Feminism)

9. ஓரினக் கல்விப் பெண்ணியம் (Lesbian Feminism)

10. மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminism)

11. மார்க்ஸியப் பெண்ணியம் (Marxist Feminism)

12. புதிய பெண்ணியம் (New Feminism)

13. கூட்டுச் சேராப் பெண்ணியம் (Non Adigned Feminism)

14. ஆதிகாலப் பெண்ணியம் (Proto Feminism)

15. தீவிரப் பெண்ணியம் (Redical Feminism)

16. திருப்பு முனைப் பெண்ணியம் (Revisionist Feminism)

17. புரட்சிப் பெண்ணியம் (Revolutionary Feminism)

18. சமதர்மப் பெண்ணியம் (Socialist Feminism)

19. ஆன்மீகப் பெண்ணியம் (Spiritual Feminism)"[10]

இவ்வாறு பத்தொன்பது வகைகளாகப் பெண்ணியத்தினை வகைப் படுத்துகின்றனர்.

### 2.4.1. மிதவாதப் பெண்ணியம்

18-ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் முதன் முதலாகத் தோன்றிய பெண்ணியக் கருத்துக்கள் மிதவாத பெண்ணியம் என்னும் பிரிவில் அடங்கும். பகுத்தறிவின் அடிப்படையில் தோற்றம் பெற்றது இவ்வகை. 'கடவுளுக்கு முன் எல்லா மனிதரும் சமம்' என்ற கொள்கையின் அடிப்படையில் பெண்ணுக்கும் ஆணைப் போல எல்லா நிலைகளிலும் சமத்துவம் வேண்டும் (Equal Rights) என்ற கருத்தை முன் வைத்தது மிதவாதப் பெண்ணியம்.

பெண்ணை, 'வீட்டை விட்டு வெளியே வா' என்று மிதவாதப் பெண்ணியம் கூறவில்லை. ஆண், பெண், உறவாடும் குடும்ப அமைப்பில் பெண் அடிமையாக இல்லாமல் சம அந்தஸ்தைப் பெற்று குடும்ப நிலையில் சுயசிந்தனை, சுயமுடிவெடுப்பு, சுயதேர்வு பெற்று பரஸ்பர மரியாதையுடன் தனித்துவம் உடையவளாகப் பெண் செயல்பட வேண்டும் என்று கூறுகிறது.

1960-களில் வளர்ந்த இந்தப் பெண்ணியம் சமத்துவம் என்ற நிலையைக் கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை, வாக்குரிமை போன்ற சட்ட ரீதியான சமத்துவத்தை உணர்த்தியது.

### 2.4.2. *தீவிரவாதப் பெண்ணியம்*

### (Redical Feminism)

இதை நவீனப் பெண்ணியம் (New Feminism) என்று கூறுகின்றனர். இது எழுபதுகளின் தொடக்கத்தில் மேலை நாடுகளில் தோற்றம் பெற்றுள்ள புரட்சிகர இயக்கமாகும். இது, பாலியலை (Sex) அடிப்டையாகக் கொண்டது.

தீவிரப் பெண்ணியம் 1960-களில் தொடங்கியது. பெண்ணியத்திற்கும் அதன் அமைப்பிற்கும் புது விளக்கத்தை அளிக்கின்றது. தீவிரப் பெண்ணியத்தின் முக்கிய கருத்து, பாலியல் அரசியல் என்பதாகும். இதில் அரசியல் என்ற சொல் அதிகாரத்தின் அடிப்படையிலான உறவைக் குறிக்கும்.

பெண்ணடிமைத் தனமானது பொருளாதார வேறுபாட்டில் வேர் கொண்டது என்பதைவிட, ஆண் பெண் பாலியல் உறவில் உண்டானது என்றும், ஆண்களைப் பகைவனாக எண்ணி ஆண் மேலாண்மையை வெறுத்து வாழ்வில் ஆணுக்கு இடமில்லை என்றும், எதற்கும் ஆண்களைச் சார்ந்திராத தன்மை உருவாக வேண்டும் என்றும் தீவிரவாதப் பெண்ணியம் இயம்பியது.

இயற்கைக்கு மாறான கருத்தோட்டங்களை இவர்கள் கொண்டிருந்ததால், உலக அரங்கில் இவ்வகை பெண்ணியம் வரவேற்பு பெறவில்லை. அதுமட்டுமின்றி பெண்ணியம் என்றாலே ஆண்களை எதிர்ப்பது, குடும்பத்தை உடைப்பது என்ற தவறான கண்ணோட்டத்தைச் சமுதாயத்தில் ஏற்படுத்தக் காரணமாக இருந்தது தீவிரவாதப் பெண்ணியமே ஆகும்.

### 2.4.3. *சமதர்மப் பெண்ணியம்*

1973-களில் மார்க்சியக் கோட்பாட்டில் நம்பிக்கை உள்ள அமெரிக்கப் பெண்ணியவாதிகள், மார்க்சியம், பெண்ணியம் ஆகிய இரண்டு கோட்பாடுகளுக்கும் இடையில் காணப்படும் கருத்து வேறுபாடுகளை ஒழுங்குபடுத்தவும், பெண்கள் அனுபவிக்கும் எல்லாவிதமான நசுக்குதலின் காரணங்களையும் அறிந்து அவற்றை நீக்கும் முறைகளை ஆராயவும் பெண்ணியக் குழுக்களை ஏற்படுத்தினர். தனித்தியங்கிய பெண்ணிய வாதிகளும் மார்க்சியவாதிகளும் இம்முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்த முயற்சியின் விளைவாக ஏற்பட்டதுதான் சோஷலிசப் பெண்ணியம் அல்லது சமதர்மப் பெண்ணியம். இது பெண்ணியக் கருத்துக்களின் மூலமும் மார்க்சியக் கருத்துக்களின் மூலமும் பெண்ணடிமையின் காரணங்களையும் ஆராய்கின்றது.

தந்தை வழிச் சமூக அமைப்பில் ஆண்கள் பெற்ற சொத்துரிமையே பெண்ணடிமைத்தனத்திற்கு வித்திட்டது என்பது சமதர்மப் பெண்ணியவாதிகளின் வாதமாகும். குடும்பம் என்ற அமைப்பு செல்வத்தைப் பேணும் தளமாக அமைந்து பெண்களை அடிமைப்படுத்தியது. சமூகத்திலும் பெண்கள் எல்லா நிலைகளிலும் ஒடுக்கப்பட்டனர். பெண்களின் உழைப்பைப் பணி மதிப்பீட்டு அடிப்படையில் தாழ்த்தி, ஆண்களை விடக் குறைந்த கூலி வாங்குபவர்களாக்கியது முதலாளித்துவம்.

இவ்வாறு, பெண்கள் குடும்பத்தில் நாள் முழுவதும் செய்யும் வேலைக்குக் கூலியில்லாமலும், வெளியில் உள்ள வேலைக்குக் குறைவான கூலியும் பெற்ற நிலை அவர்களை அடிமையாக்கின. எனவே, முதலாளித்துவ அமைப்பே பெண்களை அடிமையாக்கியது என்பது சமதர்மப் பெண்ணியத்தின் கருத்து ஆகும்.

### 2.4.4. பண்பாட்டுப் பெண்ணியம் (Cultural Feminism)

"பிறந்த வீட்டிற்குப் பெருமையும் புகுந்த வீட்டிற்கு நற்பெயரும் பெற்றுத் தருதலே குடும்பத்தில் வாழும் பெண்ணுக்குரிய கடமை எனத் தமிழ்ப் பண்பாடு உணர்த்தி நிற்கிறது. இத்தகைய கருத்தைக் கொண்டதாக அமைவது பண்பாட்டுப் பெண்ணியம்."[11]

### 2.4.5. ஆன்மீகப் பெண்ணியம் (Spirtual Feminism)

பிற சமூக உரிமைகள் மறுக்கப்பட்டது போலவே ஆன்மீக உரிமைகளும் மறுக்கப்பட்டு வந்திருக்கின்றன. பெண் சமய வாழ்விற்கே அருகதையற்றவள். முக்தி பெற வேண்டுமெனில் அடுத்த பிறவியில் ஆணாகப் பிறந்து அதன் பின்னரே முக்தி பற்றி முயற்சி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"வழிபாட்டுத்தலங்களுக்குச் செல்வதற்குத் தடையும், இல்லத்தில் இருந்தே வழிபட வேண்டும் என்ற கட்டுப்பாடும், அதைப் பெண்களே அங்கீகரித்து ஏற்பதற்கு உணர்வுப் பூர்வமாக (Sentiments) மூளைச் சலவை செய்யப்பட்டுத் தன்னைத்தானே கட்டுப்படுத்தல் என்பனவும் காலங்காலமாக நடைபெற்று வந்திருக்கின்றன. அவற்றிலிருந்து வெளியேறி ஆண்டவனும் ஆன்மீகமும் ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் உரிமையுடைத்தே என்று வலியுறுத்துவதை ஆன்மீகப் பெண்ணியம் எனக் கூறுகிறார்கள்."[12]

### 2.5. பெண்ணியம் பற்றிய பெண்ணிய இயக்கவாதிகளின் கருத்து

'மேரிவுல்ஸ்டன் கிராப்ட்' என்ற மேலை நாட்டு அறிஞர் பெண்ணிய இயக்கத்தின் முன்னோடி எனப்படுகின்றார். பெண்ணிய இயக்கம் பற்றி இவர் கூறுகையில் பகுத்தறிவு என்பது மானுடத்தின் பண்பு என்றால், மாந்தர் அனைவரும் சமம் என்றால், ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு ஏதுமில்லை. ஆண்களைப் போலவே பெண்ணும் பகுத்தறியும் திறன் பெற்றவள்தான். அறியாமை அவள் குற்றமன்று அத்தகைய சூழலுக்கு அவர்களை ஆளாக்கியது. ஆண்களின் குற்றமே அதற்குக் காரணம் கல்வியின்மையே என 'மேரிவுல்ஸ்டன்

கிராப்ட்' கூறுகின்றார். எனவே இவரைப் பெண்ணிய இயக்கப் பாதையில் சுவடுகளைப் பதித்த முன்னோடி என்று கூறுகிறோம்.

"பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து, அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்" - என்று கார்டன் (Garden) கூறுகின்றார்.

ஜெயின் என்பவர் பெண்ணியம் என்பதற்குப் 'பெண்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து ஓர் ஆற்றலை உருவாக்கி, பெண்மை, அதன் தன்மையில் ஆண்களோடு மாறுபட்டிருப்பினும், அது ஆண்மைக்கு நிகரானது என்பதை ஏற்றுக் கொள்ள வைப்பது' என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்.

புட்சர், 'பெண்ணியம் என்பது பாலின பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கமே' என்கிறார்.

பெண்ணைப் பெண்ணாகப் படித்தறிதல் (Women to read as woman) என்பதும் பெண்ணியத் திறனாய்வுப் போக்குகளாகும் என்று மேக்கிஹும் என்பவர் விளக்குகிறார்.

வரலாறு, கருத்து, வடிவம், நடை என்பவற்றில் பெண் எழுத்தாளர்கள் தமக்கென ஒரு போக்கை, பாணியை உருவாக்கிக் கொள்ளத் தூண்டுவதாகும் என எலைன் ஷோவால்டர் கருத்துரைக்கிறார்.

பாலினங்களுக்கிடையிலான அதிகார உறவு முறைகளை எடுத்துரைப்பது - எனக் கேட்மில்லட் கூறுகிறார்.

இவ்வாறு பெண்ணியம் பற்றிய பல்வேறு வகையான கருத்துக்களைச் சில பெண்ணியவாதிகள் திறனாய்வு மேற்கொண்டும் கூறியுள்ளனர்.

## 2.6. *பெண்ணியம் (Feminism) பற்றிய சிந்தனைகள்*

ஆணின் தேவைகளை நிறைவு செய்பவளே பெண் என்பதே சமுதாயத்தின் நிலையாக உள்ளது. ஆணுக்குப் பாலுணர்வுக் கவர்ச்சியைத் தருவதே பெண்மை என்பதே ஆண்களின் எண்ணம் என்ற கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

காலம் காலமாகத் தொடர்ந்து வரும் இவ்வெண்ணம் மாற்றப்பட வேண்டும். பெண் வெறும் போகப் பொருள் இல்லை. ஆணும் பெண்ணும் சம உரிமையுடையவர்கள் என்ற சிந்தனைகள் தோன்றிய போது பெண்ணியமும் தோன்றியது எனலாம்.

கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டுகளில் மேலை நாடுகளில் தோன்றிய பெண்ணியச் சிந்தனையின் முன்னோடியாக மேரி உல்ஸ்டன் கிராப்ட் என்ற ஆங்கிலப் பெண்மணியைக் குறிப்பிடுவர். இவரைத் தொடர்ந்து பலரும் பெண்ணியச் சிந்தனைகளை வெளியிட்டனர்.

'பெண்ணியத்தின் தாய்' (Mother of Feminism) எனப் பேசப்படும் பெட்டி பிரைடன், 'பெமினைன் மிஸ்டிக்', (Feminine mystic) என்ற நூலில் பெண்ணியம் பற்றிய பல கருத்துக்களைக் கூறியுள்ளார். சமூகத்திலும், வேலைத் தளத்திலும், குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும், இந்நிலையை

மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வு பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தின் பரந்து பட்ட வரையறையாக இந்நூலில் கூறப்படுகிறது.

ரோஸ்மேரிடாஸ் பல வகைப் பெண்ணியம் பற்றி பல்வேறு புனைக் கருத்துக்கள் இருப்பதாகத் தனது 'Feminist Thought' என்ற நூலில் குறிப்பிடுகிறார். மிதவாதப் பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம், சோஷலிசப் பெண்ணியம் என்று அவற்றை வகைப்படுத்துகிறார்.

ஜான்ஸ்டுவர்ட்மில் தம் பெண்ணடிமை (Subjection of woman) என்ற நூலில் குடும்பம் என்ற நிறுவனம் பெண்ணுக்குப் பாதகமானது என்று கூறியுள்ளார்.

1995-இல் வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் 'பெண்ணுரிமை - மனித உரிமை' என்ற குரல் ஒலித்தது.

1910-ஆம் ஆண்டு மார்ச் 8-இல் நியூயார்க் நகரப் பஞ்சாலைத் தொழிலாளப் பெண்கள் எழுப்பிய உரிமைக்குரல் சர்வதேசப் பெண்கள் தினத்திற்கு அடித்தளமாயிற்று இந்தியாவின் வறுமை, வன்முறை, வகுப்புவாதம், சாதியம், சிசுக்கொலை, ஊழல் ஆகிய சிக்கல்களுக்கு எதிராகப் பெண்களை ஒன்று திரட்டும் கடமையைச் செய்கின்ற தினமாகச் சர்வதேசப் பெண்கள் தினத்தை மேற்கொள்ளுமாறு அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் அறைகூவல் விடுத்துள்ளது. கடந்த ஆண்டு டென்மார்க்கில் அமெரிக்க முதல் பெண்மணி கிளாரி ரோதம் கிளிண்டன் ஏழை நாடுகளில் உள்ள பெண்களின் எழுத்தறிவின்மையைப் போக்க 10 கோடி டாலர் நிதி தந்தார்.

'பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திரு நாட்டில்

மண்ணடிமை தீர்தல் முயற்கொம்பே'

என்பதை உலகம் உணரத் தொடங்கிவிட்டது. பெண்ணினத்திற்கு மட்டுமின்றி ஒரு சமத்துவ சமுதாயம் உருவானது மனித இனத்தையே மேம்படுத்தவல்லது.

## 2.7. மேலை நாடுகளில் பெண்ணியத்தின் தோற்றம்

சமுதாயத்தில் மாற்றங்கள் தோன்றுவது வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையானதொன்றாகும். 18-ஆம் நூற்றாண்டு வரை வழக்கிலிருந்து சமூக மதிப்பீடுகள் அனைத்தும் சமயச் சார்புடையன. வாழ்க்கையின் அனைத்து நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் சமயத்தின் அங்கீகாரம் பெற்று, வாழ்க்கை நியதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, முழு நம்பிக்கையுடன் செயற்பட்டு வந்தன. சமுதாயத்தில் மதம் முழு ஆதிக்கம் செலுத்தியது. அம்மதத்தைச் செயற்படுத்தும் மதத் தலைவர்கள் கடவுள்களுக்கிணையாக மதிக்கப்பட்டு வந்தனர். சமூகத்தில் நிலவி வந்த தீமைகளும் மதத்தின் அங்கீகாரத்தோடும் சமூகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தக் கூடாது என்ற கொள்கையோடும் காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன.

### 2.7.1. பெண்ணியம் தோன்றக் காரணங்கள்

18-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய சமுதாயத்தில் சில மாற்றங்கள் தோன்றத் தொடங்கின. இதற்கு அடிகோலியவை புதுமைக் கருத்துக்கள் ஆகும். இப்புதுமைக் கருத்துக்கள் இக்கால கட்டத்தில் தோன்றத் தொடங்கியதால் இக்கால கட்டத்தைப் பகுத்தறிந்து தெளியும் காலம்

(Age of reason/age of a enlightenment) என்றழைக்கின்றனர். இதன்படி உலகத்தில் வழங்கும் எதையும் காரண காரியங்களோடு பகுத்தறிந்து ஆராய்ந்து, தெளிந்து உண்மை எனத் தெரிவற்றையே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பரவத் தொடங்கியது.

இதன் விளைவாக உலக வாழ்க்கையின் கூறுகள் அனைத்தும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாறு ஆராய்ச்சிக்கு உட்படுத்தியவற்றுள் ஒரு பகுதி சமூக மதிப்புகள் ஆகும். சமூகத்தில் பரம்பரையாக வழங்கி வந்த ஏற்றத் தாழ்வுகள். ஆதிக்கம் முதலியவற்றை வலியுறுத்தும் மதிப்புகள் யாவும் விவாதத்திற்கு உரிய பொருளாயின. இவை உண்மைக்குப் புறம்பானவைகளாகக் கருதப்பட்டுச் சமத்துவம், தனிமனித சுதந்திரம், குடியாட்சி, எல்லோருக்கும் ஒரே நியதி என்ற புதிய சமூக மதிப்புகள் உருவாகத் தொடங்கின.

### 2.7.2. மேலை நாட்டுப் பெண்ணியம்

பெண்ணியத்திற்கு அடிப்படையான சமத்துவம், சுதந்திரம் போன்ற கருத்துக்கள் முதன் முதலில் பிரான்சு நாட்டில் எழுந்தது. பின்னர் அவை அமெரிக்கா மற்றும் இங்கிலாந்திலும் பெண்ணிய இயக்கமாக வளர்ச்சி அடைந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்கா, இங்கிலாந்தில் உள்ள மகளிர் அமைப்புகள் பெண்களின் நலனுக்காகப் போராடின.

அமெரிக்காவின் தேசிய மகளிர் கட்சி (National womens party) தேசிய வேலைபார்க்கும் பெண்களின் வியாபாரத் கூட்டுக்குழு (National Federation of Professional womens Business) போன்ற அமைப்புகளும், இங்கிலாந்தில் பாசட் சொசைட்டி (Fawcett Society), பெண்களின்

நிலைக்குழு (Stectus of womens Group), பெண்களின் விடுதலைக் குழு (Womens freedom league) தொழில் கட்சி போன்ற அமைப்புகளும் பெண்களின் நலனுக்காகப் போராடின. அமெரிக்காவில் பெண்கள் வாக்குரிமைக்காகப் போராடிய இருபெரும் இயக்கங்கள் பெண்கள் கட்சியும் (Womens Party) நவ்சாவும் (Nawsa) ஆகும். இவை பெண்களுக்குக் கல்வியில் சம வாய்ப்பு, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம ஊதியம், சட்டத்தில் சம உரிமை குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்தல் முதலியவற்றை அடையப் போராடின.

## 2.8. இந்தியப் பெண்ணியம்

இருபதாம் நூற்றாண்டு முடிந்து இருபத்தோராம் நூற்றாண்டை வரவேற்கும் மகளிர் சமுதாயம் தாம் கடந்து வந்த பாதையைப் பின்னோக்கிப் பார்த்துத் தங்களை ஆய்வுக்கு உட்படுத்தி, இனிவரும் காலங்களில் குடும்பத்தில் கல்வியில், பொருளாதாரத்தில், அரசியலில் எத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

மேலை நாடுகளில் பெண்ணியத்தின் தோற்றம் பகுத்தறிவு அடிப்படையில் அமைய, இந்திய நாட்டில், பெண்ணியம் சமூகச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் தோற்றம் பெற்றது எனலாம். சமூக சீர்திருத்தவாதிகளான இராஜாராம் மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், கேசவ சந்திர சென் போன்றோர் பலதார மண எதிர்ப்பு, சதி ஒழிப்பு, குழந்தை மண எதிர்ப்பு, பெண் கல்வி, கைம்பெண் மறுமணம், தேவதாசி முறை ஒழிப்பு என்பவற்றை அடிப்படைச் சமூகச் சீர்திருத்தங்களாக முன் வைத்துப்

பெண் விடுதலைக்காகப் போராடியதும் பாடியதும் அடுத்து வந்த கால கட்டங்களில் 'காந்தி' சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்புக்கு வித்திட்டதும், பூலே, பெரியார் போன்றவர்கள் தீவிரமாகப் பேசியும் எழுதியும் பெண் விடுதலையை முதன்மைப் படுத்தியதும் இந்தியப் பெண் விடுதலை வரலாற்றில் புதிய சகாப்தத்திற்கு வித்திட்டன.

1950-க்கு பின் நாடெங்கும் கிளர்ந்தெழுந்த பெண் விடுதலை அமைப்புகள், தன்னுரிமை மகளிர் அமைப்புகள் ஆகியன அன்று முதல் இன்று வரை சமத்துவம் விடுதலை இரண்டுக்கும் குரல் எழுப்பிப் போராடி வருகின்றன.

இந்தியப் பெண்ணியம் என்பது இந்தியப் பண்பாட்டின் அடித்தளமான குடும்ப அமைப்பைச் சிதைக்கவில்லை என்றாலும் பெண்கள் குடும்பப் பேணுதலுக்கே உடையவர்கள் என்ற மரபியல் போக்கு மாற்றம் பெற வேண்டும் என்பதையும் பெண்களின் ஆளுமை முக்கியத்துவம் பெற வேண்டும் என்பதையும் வற்புறுத்தி வருகிறது. மேலும் சமூகப் பொருளாதாரம், கல்வி, அரசியல், மதம், பண்பாடு ரீதியாக நவீனப் பெண்கள் சுய சார்புடையவர்களாக வளர வேண்டும் என்று கூறுகிறது.

### 2.8.1. இந்தியப் பெண்ணியத் தோற்றமும் வளர்ச்சியும்

இந்திய அரசியல் சட்டம் மகளிர்க்குச் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் தந்துள்ளது. ஆயினும் அவை ஏட்டளவேயன்றி நடைமுறையில் முழுமையாகச் செயற்படுத்தப்பட வில்லை. பெண்ணிற்கு என்று சில உரிமைகளும், தனித்துவமும் உண்டு என்பதைச் சமூகம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில் தோன்றிய சமூகச்சீர்திருத்த இயக்கங்கள் பெண்களின் முன்னேற்றத்திற்குச் சிறந்த பங்காற்றியுள்ளன. ஆங்கிலேயரின் வருகை, அவர்களின் வரவால் இந்திய நாட்டில் பரவிய ஆங்கிலக் கல்வி, வெளியுலகத் தொடர்புகள், கருத்துப் பரிமாற்றங்கள், தகவல் தொடர்புச் சாதனங்கள், அறிவியல் வளர்ச்சி போன்றவை மகளிர் பற்றிய புதிய சிந்தனைகளின் எழுச்சிக்குக் காரணமாக அமைந்தன.

அகில இந்தியப் பெண்கள் மாநாடு (AIWC), இந்தியத் தேசிய மகளிர் கவுன்சில் (NCM), கஸ்தூரிபாய் காந்தி தேசிய நினைவு நிதிக்குழு (KGNMT), உலகப் பெண்கள் மாநாடு (WCM), இந்தியச் சனநாயக மாதர் சங்கம் போன்ற அமைப்புகள் இந்தியச் சமூக அரங்கில் பெண்ணுரிமைக்கு அவ்வப்போது குரல் கொடுத்து மகளிர் முன்னேற்றத்திற்கான பலமாற்றங்களைப் பெற்றுத் தந்துள்ளன. முதல் உலகப் பெண்கள் மாநாடு (1975) மெக்சிகோவிலும், இரண்டாம் மாநாடு (1980) டென்மார்க்கிலுள்ள கோபன்கேகளிலும், மூன்றாம் மாநாடு (1985) கென்யாவிலுள்ள நைரோபியிலும், நான்காம் மாநாடு (1995) சீனாவிலுள்ள

பிஜிங்கிலும் நடைபெற்றன. நான்காம் உலகப் பெண்கள் மாநாட்டில் பெண்களைப் பற்றி 12 கருத்துப் பொருண்மைகள் விவாதிக்கப் பெற்றன. அவை,

1. வறுமையின் சுமையைத் தடுத்தல்
2. கல்வி
3. உடல் நலம்
4. பெண்களுக்கு எதிரான கொடுமை
5. பெண்களைக் கற்பழித்தலாகிய போர்க்குற்றம்
6. ஆண், பெண் வேறுபாடின்றிச் சம பணிக்குச் சம ஊதியம் அளித்தலாகிய பொருளாதார அமைப்பு.
7. அரசு அலுவலகங்கள், அரசியல் கட்சிகள், ஐக்கிய நாடுகள் சபையின் அங்கங்கள், சர்வதேசக் குழுக்கள் ஆகியவற்றில் ஆண், பெண் இருபாலர்க்கும் சமபங்கு கொடுத்தலாகிய அதிகார பங்கீடு.
8. பெண்களை மேன்மைப்படுத்தும் முறைகளை அரசு உண்டாக்குதல்.
9. பெண்களின் மனித உரிமைகள்
10. செய்தி தொடர்பான அமைப்புச் சாதனங்களில் பெண்களை இழிவுபடுத்தும் முறையிலான வெளியீடுகளைச் சட்டத்தின்படி தடுத்தல்.
11. சுற்றுப்புறச் சூழ்நிலையும் பெண்களும்
12. சிறுமிகளின் நிலை

ஆகியனவாகும்.

பெண்ணியக் கருத்துக்கள் இந்தியாவில் வெளிநாட்டுத் தொடர்புகளின் மூலம் தோற்றம் கொண்டன. பெண்களின் முன்னேற்றம் பற்றிய கருத்துக்களை ஆட்சியாளர்களும், சமூகச் சீர்திருத்தவாதிகளுமே வெளியிட்டனர். பெண்களின் முன்னேற்றத்திற்குரிய வழிவகைகளைப் பல திட்டங்கள் மூலமும் சட்டங்கள் மூலமும் செயற்படுத்தினர்.

மேலை நாடுகளில் தோன்றி வளர்ந்த பெண்ணிய இயக்கங்களுக்கும் சில முக்கியான வேறுபாடுகள் உள்ளன. மேலை நாடுகளில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அப்பெண்களே உணர்ந்து அவற்றை நீக்கப் போராடினர். அவர்கள் பெற்ற கல்வியும், வெளியுலகத் தொடர்பும் இதற்குக் காரணமாக அமைந்தன. அவர்கள் ஆண்களின் எதிர்ப்பைச் சமாளித்துப் போராடினர்.

ஆனால் இந்தியாவில் பெண்கள் முன்னேற்றத்திற்கு ஆண்களே முன்னின்று முயற்சிகள் எடுத்தனர். இதற்குக் காரணம் பெண்களின் கல்வி அறிவின்மையும், வெளியுலகத் தொடர்பின்மையும் ஆகும். பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை உணராமல் அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்தனர். ஆகவே தொடக்கக் காலக் கட்டங்களில் ஆண்களே பெண்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்து அவர்களும் சமூகத்தில் முன்னேற வேண்டும் என்று பாடுபட்டுள்ளனர். பெண்கள் உரிமைகளைப் பெற்றுச் சுதந்திரமான வாழ்வு வாழப் பல தலைவர்கள், பல சீர்திருத்தவாதிகள், பல இயக்கங்கள் பேருதவி புரிந்துள்ளதைச் சரித்திரங்களின் வாயிலாக அறியலாம்.

## 2.8.2. இந்தியாவில் பெண்ணுரிமை இயக்கங்கள்

இந்தியாவில் பல பெண்ணுரிமை இயக்கங்கள் திறம்படச் செயல்பட்டு வருகின்றன. இவை பெண்களுக்கு எதிரான சுரண்டல், ஒடுக்குமுறை, வன்முறை போன்றவற்றைத் தட்டிக்கேட்டு, அவற்றை ஒழிக்கத் தேவையான சட்டங்களையும், நடைமுறைத் தீர்வுகளையும் அரசு சாரா (N.G.O) உதவியோடு உருவாக்குகின்றன.

'கல்வியில்லாப் பெண்கள் கலர் நிலம்

அந்நிலத்தில் புல் விளைந்திடலாம்

நல்ல புதல்வர்கள் விளைந்திடல் இல்லை'

என்பதை உணர்ந்து ஒவ்வொரு பெண் குழந்தையும் ஐந்தாவது வரையாவது படிக்க வைக்கப்படுகின்றன. பொருளாதாரத்தில் பெண்ணின் மேலாண்மையை உயர்த்த வழி காட்டுகின்றன. பெண்கள் கூட்டுறவு சங்கம், பெண்கள் கூட்டுறவு வங்கி, பெண்களுக்காக கடன் வழங்கும் சொஸைட்டி போன்றவற்றை அமைத்து பெண்களுக்கு உதவுகின்றன.

இந்தியாவில் ஜனநாயக மாதர் சங்கம், பெண்கள் ஒருங்கிணைப்பு சங்கம், சமூக செயல்பாட்டிற்கான பெண்ணுரிமை வாதிகள் கழகம், 'சங்ககாலப்' பெண்கள் கூட்டுச் செயல்பாட்டுக் கழகம், இந்திய தேசிய மாதர் சம்மேளனம், ஜோண்டா கிளப், மகளிர் தொண்டு நிறுவனம், மண்டசேரிட்டி கிளப், பெண்ணுரிமை இயக்கம், இந்திய மாதர்

இயக்கம், தன்னுரிமை மகளிர் அமைப்புகள், வெகு ஜன அமைப்புகள், ஆதரவற்ற மகளிருக்குப் புகலிடம் தருபவை, பெண் தொழில்முறைச் சங்கங்கள், அரசியல் கட்சிகளும் மகளிர் அணிகளும், பெண்கள் சிக்கல் குறித்து ஆராயும் குழுக்கள் என்ற எண்ணற்ற இயக்கங்கள் இந்தியாவில் உள்ளன.

இந்திய மகளிர் விடுதலை இயக்க மாநாடுகள் பம்பாயில் 1985-இல் நடந்தன. எண்பதுகளில் சிப்கோ மகளிர் இயக்கமாக மாறியது. இத்தகைய இயக்கங்கள் வரதட்சணைக் கொலை, குடிசை வாழ் மக்களின் அடிப்படை வசதிகள் ஆகியவற்றிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றன.

பெண் குழந்தைகள் வேலைச் சுமையால் உடற்சோர்வு, மனத்தளர்ச்சி, சத்துணவு குறைவு போன்றவற்றால் பாதிக்கப்படுவதை இவ்வியக்கங்கள் எதிர்க்கின்றன. அறிவியலின் துணை கொண்டு பெண் குழந்தை கருவில் அழிக்கப்படுவதைக் கண்டிக்கின்றன. 17-11-1996 அன்று இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில் பல இலட்சக்கணக்கான பெண்கள் பெங்களூர் இரயில் நிலையத்தில் கூடி உலக அழகிப் போட்டியைக் கண்டனம் செய்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்தியத் திரைப்படங்களில் கதாநாயகி மூலம் ஆணாதிக்கப் பார்வை நன்கு சித்தரிக்கப்படுகிறது. பெண்களுக்கு எதிரான இத்தகைய சித்தரிப்புகளையும், ஆபாசம், வன்முறை, வக்கிரங்கள் நிறைந்த திரைப்படங்களையும், ஆபாச சுவர் ஒட்டிகளையும் எதிர்த்துப் பெண் இயக்கங்கள் கொதித்து எழுகின்றன. இதன் மூலம் நாட்டின் பண்பாடு செல்லரிக்கப்பட்டுச் சிதைந்து போவதை இவர்கள் அரசுக்கு உணர்த்துகின்றனர்.

'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்று மார்க்சும் ஏங்கல்சும் அறைகூவல் விடுத்தது போல் இன்று 'உலகப் பெண்களே ஒன்றுபடுங்கள்' என்ற முழக்கம் பரவலாக ஒலிக்கிறது.

## 2.8.3. பெண்கள் முன்னேற்றத்தில் சட்டங்களின் பங்கு

"இங்கிலாந்தில் வாக்குரிமை இயக்கத்தில் பங்கு பெற்று, இந்தியா வந்தடைந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெற்ற ஆங்கிலேயப் பெண்களான அன்னிபெசன்ட், மார்ச்ரட் கசின்ஸ், டோரதி ஜினராஜதாசா முதலியோர் இந்தியப் பெண்களின் வாக்குரிமைக்காகப் போராடினர். சரோஜினி நாயுடுவைத் தலைவியாகக் கொண்ட மகளிர் குழு ஒன்று பெண்களுக்கும், ஆண்களுக்கும் சமமான வாக்குரிமை அளிக்க வேண்டுமென மான்டே குவிடம் 1917-இல் கோரிக்கை வைத்தது. சட்ட நிபுணர்களின் ஆலோசனையாலும், இந்தியத் தேசிய அரசியல்வாதிகளின் ஆதரவாலும் இக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

இவ்வாக்குரிமை தகுதி பெறச் சொத்துரிமையும், வருமானமும் தகுதிகளாக வரையறை செய்யப்பட்டமையால் அதிக அளவில் பெண்கள் வாக்குரிமை பெறவில்லை. பெண்கள் வாக்குரிமையின் இரண்டாவது கட்ட முயற்சி 1928-இல் சைமன் குழு இந்தியாவிற்கு வந்த பொழுது மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாக 1935-ம் ஆண்டு ஆண்களைப் போன்று 21-வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அனைவரும் வாக்களிக்கத் தகுதி வாய்ந்தவர்கள் என்று சட்டம் கொண்டு வரப்பட்டது.

1. சிசுவதைச் சட்டம் (1802)

2. உடன்கட்டைத் தடுப்புச் சட்டம் (1829)

3. திருமணங்களை உறுதிபடுத்தும் சட்டம் (1864)

4. இந்திய மண விலக்குச் சட்டம் (1869)

5. இந்து விதவை மறுமணச் சட்டம் (1858)

6. திருமண வயது வரம்புச் சட்டம் (1881)

7. பெண்கள் சொத்துக்களை வாங்கவும், விற்கவும் காப்பீடு செய்யவும் கடன் உதவித் தொகை பெறவும் உரிமையுடைய சொத்துரிமைச் சட்டம் (1874)

8. வாரிசுரிமைச் சட்டம் (1925)

9. குழந்தை மணத் தடைச் சட்டம் (1929)

10. சிறப்புத் திருமணச்சட்டம் (1954)

11. இந்து திருமணச் சட்டம் (1955)

12. பெண்கள் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கும் இந்து வாரிசுச் (சுவிகரிப்பு) சட்டம் (1956)

13. வரதட்சணைத் தடைச் சட்டம் (1961)

14. மகப்பேறு நலச் சட்டம் (1961)

15. தேவதாசி ஒழிப்புச் சட்டம் (1968)

16. பெண்களுக்குச் சம ஊதியம் அளிக்கச் சட்டம் (1976)

17. பெண்களை இழிவுப்படுத்திக் காட்சி பொருளாக்குவதைத் தடை செய்யும் சட்டம் (1986)

போன்ற பல சட்டங்கள் மகளிர் நலக்காக இயற்றப்பட்டன.

1975-ஆம் ஆண்டு உலகப் பெண்கள் ஆண்டாகக் கொண்டாடப்பட்டு அதன் பின்னர் உள்ள புத்தாண்டுகள் பெண்கள் புத்தாண்டாக அறிவிக்கப்பட்டது. இந்தியப் பெண்களின் பல்வேறு நிலைகளை ஆராய்ந்து அறிக்கை அளிக்க இந்திய அரசு ஒரு குழுவை நியமித்தது. சமத்துவத்தை நோக்கி இந்தியப் பெண்களின் சமுதாய நிலை பற்றிய குழுவின் அறிக்கை (Towards Equality : Report on the committee on the status of women in india) அளித்த முடிவுகள். இந்திய அரசின் பல்வேறு சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் பெண்களுக்குப் பயனளிப்பதற்குப் பதிலாக எதிர்விளைவுகளையே அளித்திருக்கின்றன என்று சுட்டிக் காட்டியது. இதன் விளைவாக உலகப் பெண்கள் பத்தாண்டுகளில் பெண்களைப் பற்றிய பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பெண்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யப்பட்டது. இன்றைய காலச் சூழலிலும் மகளிர்க்குரிய இட ஒதுக்கீட்டைப் (33%) பெறப் போராட வேண்டிய நிலையில் உள்ளது"[13]

## 2.9. *தமிழில் பெண்ணியம்*

தமிழ் கூறும் நல்லுலகில் இன்று பெண்ணியம் என்பது இந்தியப் பின்னணியிலும் உலகமயமாதல் பின்னணியிலும் பார்க்கப்படுகிறது. அதாவது இந்தியப் பின்னணி என்பது இந்துத்துவப் பின்னணியாகவும், உலகமயப் பின்னணி என்பது அமெரிக்க வல்லாதிக்கப் பின்னணியாகவும் சித்தரிக்கப்படுகின்றன.

20-ஆம் நூற்றாண்டில் ஏனைய மேலை நாடுகளைப் போலவே குடியேற்ற நாட்டின் ஓரங்கமாக இருந்த தமிழ்நாடு தனது வேர்களைத் தேடியது. திராவிட இயக்கத்தின் வரலாற்றில் தமிழ்ப் பெண்ணியத்தை நிலை நிறுத்தும் முயற்சி பாரதிதாசனால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

### 2.9.1. *சங்க காலத் தமிழகத்தில் பெண்ணியம்*

சங்க காலத்தில் பெண்ணுக்குக் கல்வி உரிமை இருந்தது. முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் வாழ்ந்துள்ளனர். குயவர்குலப் பெண்ணும், பூதப் பாண்டியன் மனைவி பெருங்கோப் பெண்டும் பாப்புனையும் ஆற்றல் பெற்றிருந்தனர். அவ்வை அரசியல் பணி புரிந்ததையும் அறிய முடிகிறது.

படைப்பிலக்கியவாதிகளான தமிழர்களாம் வள்ளுவரும் இளங்கோ அடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் வடநாட்டு நெறிகளாம் சமண பௌத்தத்தைத் தமிழ்ச் சமணமாகவும், தமிழ் பௌத்தமாகவும் மாற்றினர். இரட்டைக் காப்பியங்களில் தமிழ்ப் பெண்ணியத்திற்கான கூறுகளைக் கண்ணகி, மாதவி, மணிமேகலை முதலான பாத்திரங்கள் வழியே இடம் பெறச் செய்தனர்.

ஆளுமை ஆண்களுக்கே உரியது என்ற ஆணாதிக்க மதிப்பீட்டுக் கோட்பாட்டை உயர்த்திப் பிடிக்கும் இராமாயணத்துக்கு எதிராகப் படைக்கப்பட்டது சிலம்பு. வாழவந்த மண்ணில் பார்த்துக் கொண்டிருக்கும் ஊர் மக்களாலும் தெய்வங்களாலும் பாதுகாப்பற்று விடப்படும் ஏதிலியான கண்ணகி தன் சொற் திறத்தால் மன்னனுக்கு எதிராக வழக்காடி வெற்றி பெறுகிறாள். தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி மெய்வருத்தக் கூலிதரும் என்ற வள்ளுவத்திற்கு வாழும் அடையாளமாகத் திகழ்கிறாள்.

மணிமேகலையும் தன் உயர்ந்த மதி நுட்பத்தால் பிற சமயச் சொல்லாடல்களுக்கு எதிராக வாதிட்டுத் தனது மெய்யியலை நிறுவுவதாக மேகலை கூறும், சங்க காலத்தில் தமிழ்ப் பெண்ணியம் அகமும் புறமும் பேசியது.

தொடக்கத்திலேயே தமிழ்ப் பெண்ணியம் சமயச் சார்பற்றதாயும் தன்மானம், பகுத்தறிவு எனும் இருபெரும் பண்புகள் பெற்றதாகவும் தோன்றியது.

### 2.9.2. சங்க காலத்திற்குப் பின் பெண்ணியம்

சங்க காலத்திற்குப் பின் அறநெறி இலக்கியம் தோன்றிய காலத்தில் பெண்ணானவள் நிலவுடைமைச் சமூக அமைப்பிற்கேற்ப உருவாக்கப்படுகிறாள்.

சாதிய நிலவுடைமை மதிப்பீடுகள் கொடிகட்டிப் பறந்த நிலையில் தமிழ்ப் பெண்ணியம் இருந்த இடம் தெரியாமல் எங்கோ பாமர மக்கள் வாழும் குடில்களில் பதுங்கி வாழ்ந்தது.

புராணக் கதைகளிலும் சக்தியை விடச் சிவனே உயர்ந்தவன் என்று கற்பிக்கப்பட்டது. பத்து அவதாரங்களாக இறைவன் பிறந்தாலும் அவன் பெண்ணுரு கொள்ள மாட்டான், பெண் தெய்வங்களுக்கு ஆடைகள் மாற்றும் அதிகாரமும் ஆண்களுக்கே உரியதாக்கப்பட்டது. தீண்டாமைக் கொடுமை ஒரு புறம் சமூக அளவிலும், மறுபுறம் பெண் சமூக அளவிலும் பேருருக் கொண்டது. கண்ணகி, மணிமேகலைக் கதைகள் ஒரங்கட்டப்பட்டுப் பாஞ்சாலி, சீதை, சாவித்திரி, நளாயினி, சந்திரமதி, தமயந்தி, சகுந்தலை கதைகளின் மூலம் இந்துப் பெண்ணிய மதிப்பீட்டுக் கட்டமைப்பு ஓர் குறுக்கமான கட்டுண்ட சமூக அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது.

### 2.9.3. *தமிழில் பெண்ணிய வளர்ச்சி*

பெண் விடுதலைப் பாடல்கள் பாடிய பாரதியும் பாரத மாதாவைப் பாஞ்சாலி என்ற படிமத்தின் மூலம் சித்தரித்தார். தமிழ்ப் பெண்ணியம் தன் உயிர்ப்பிற்கான ஆதாரத்தைப் பாரதிதாசனிடமே பெற்றது. தாய்த் தெய்வ வழிபாடும் பெண் தெய்வ வழிபாடும் தமிழ்ப் பெண்ணியத்தின் வேர் முதல் அடையாளமாகும். இந்தத் தமிழ்ப் பெண்ணியத்தின் அடையாளமே இந்தியாவின் ஈஸ்வரி, பவானி, சந்தோஷமாதா என இந்தியா முழுவதும் தமிழ்ப் பெண்ணியம் இன்று இந்துத்துவ பெண்ணியமாக்கப்பட்டுள்ளது.

பாரதிதாசன் கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா முதலான படைப்புகளில் தமிழ்ப் பெண்ணியத்தை மீட்டுருவாக்கம் செய்தார்.

தமிழ் முதல் நாவலாசிரியர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை பெண்கல்வி, பெண் மதிமாலை, பெண்மானம் ஆகிய நூல்கள் மூலம் பெண்ணியம் பரப்பினார். கைம்பெண் மணம், பெண்கல்வி குழந்தைமணம் ஒழிப்பு, வரதட்சணை எதிர்ப்பு போன்றவற்றை ஆதரித்தார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, 'மனோன்மணியம்' என்ற நாடகம் எழுதினார். அதில் தமிழ்த்தாய் வாழ்த்து, லட்சியக் காதல், லட்சியப் பெண்கள் ஆகியன இடம் பெற்றன. தமிழ் தந்த இராமலிங்கர், வேதநாயகம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை ஆகியோரைப் பாரதியாருக்கு முன்னோடிகள் எனலாம்.

## 2.10. இந்தியப் பெண்களால் பெண்களுக்கான அமைப்புகளின் தோற்றம்

இந்தியாவில் ஆண்களால் தொடங்கப்பெற்ற பெண்கள் முன்னேற்றப்பணிகள் பெண்களையும் ஈர்த்தது. இந்தியப் பெண்கள், பெண்களுக்கென சில அமைப்புகளைத் தோற்றுவித்தனர். இவ்வமைப்புகள் பின்னாளில் மேலைநாடுகளில் தோன்றியது போலவே இந்தியாவிலும் பெண்ணிய இயக்கம் பெண்களால் முன்னெடுத்துச் செல்லும் போக்கிற்கு வழி அமைத்துக் கொடுத்தது. பாரதி காலம் வரையிலான சில பெண்கள் அமைப்பு பெண்கள் நலத்துக்காகச் சாதித்தது குறிப்பிடத்தக்கது. முதன்முதலில் 1886-இல் கொல்கத்தாவில், 'பிரம்ம சமாஜ', என்ற அமைப்பின் முன்னிலையில், சுவர்ணகுமாரி தேவி என்பாரின் தலைமையில் ஒரு பெண்கள்' கூட்டமைப்பு தொடங்கப்பட்டது. இந்தக் கூட்டமைப்பின் நோக்கம் பெண்களிடையே நட்புறவையும் பிறர்க்கு உதவும் மனப்பான்மையை வளர்ப்பதுமாகும். மேலும் இங்கு ஏழைப் பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சியும் அளிக்கப்பட்டது. பண்டித ராமாபாய் (1853-1922).என்பார், கலப்பு மணம் செய்து கொண்டு கைம்பெண் ஆன பின்னர், பெண்கள் முன்னேற்றத்திற்கு நாடெங்கும் சென்று உழைத்தார். பெண் கல்வி வளர்ச்சிக்காகப் பூனாவில் ஆரிய மகான சமாஜத்தைத் தொடங்கினார். இதன் கிளைகள் பம்பாய், கோலாம்பூர், அகமதாபாத் ஆகிய இடங்களிலும் தோன்றியது. கைம்பெண்டிர், நிராதரவான பெண்களுக்கென சாரதாசதன், முத்திசதன், ஈரபாசதன் ஆகிய அமைப்புகளைத் தொடங்கினார்.

1903 -இல் ஸ்ரீ கொரேஸ்திரியன் மாஸ்டல் என்ற அமைப்பு பெண்களின் பொருளாதார விடுதலைக்கு உதவியது. 1903-இல் குஜராத் இந்து ஸ்திரிமாஸ்டல் தோன்றிப் பெண்களுக்குத் கைத்தொழில் பயிற்சியும்

அளித்தது. 1909 ரமாபாய் ரானசே என்பவரால் சேவாசதன் என்ற அமைப்பும் வங்காளத்தில் சரோஜ் நளினி என்பாரால் மகிளாசமிதி என்ற அமைப்பும் தோற்றுவிக்கப்பட்டது.

வங்காளத்துச் சரளாதேவி என்பவரால் 1910-ஆம் ஆண்டு 'பாரதப் பெண்கள் மகா சபை' தொடங்கப்பட்டது. பின்பு 1917 -இல் ஐரோப்பியப் பெண்களான அன்னிபெசன்ட் அம்மையார், மார்கரெட்கசின்ஸ், டோரதி ஆகியோரால் பெண்களின் இந்திய சங்கம் தோற்றம் பெற்றது. இதற்குப்பின் நாடு முழுவதும் மேலும் மேலும் பற்பல மாதர் அமைப்புகள் தோன்றின.

### 2.11. *பாரதியின் பெண்ணியம் பற்றிய அறிவாற்றல்*

பாரதியார் வெறும் ஆர்வத்தினால் மட்டும் உந்தப்பெற்றுப் பெண்ணியம் பற்றி எழுதவில்லை. அதைப் பற்றிய நிரம்பிய அறிவாற்றல் உடையவராக விளங்கினார். பாரதியாருக்குப் பல மொழிகள் தெரியும். ஆங்கிலம், வடமொழி, இந்தி, வங்காளி, பிரஞ்சு ஆகிய மொழிகளில் அறிவுண்டு. சிறப்பாக மேலை நாட்டுக் கவிஞர்களில் பாரதிக்கு அதிக ஆர்வமிருந்தது. ஆங்கில அறிவின் மூலம் மேலைநாட்டுப் பெண்ணியக் கருத்துக்களை பாரதி நன்கு அறிந்திருந்தார்.

பாரதிக்கு உலகளாவிய அரசியல், சமூகக் கருத்துக்களையும் நடைமுறைகளையும் அறிய அவரது பத்திரிகைப் பணி வாய்ப்பளித்தது. பாரதிக்கு அனைத்திந்திய அரசியல் தொடர்புகளுமிருந்தன. பெண்ணிய முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்ட நிறுவனங்கள் தனிநபர்கள் ஆகியோருடனும் அவருக்குத் தொடர்புகளிருந்தன. தமிழ் இலக்கியத்திலும் தமது அறிவைப் பாரதி பெருக்கிக் கொண்டிருந்தார்.

## 2.11.1. தமிழ் இலக்கிய அறிவு வள்ளலாரும் பாரதியும்

பாரதி சங்க இலக்கியத்தில் பெரும் புலமை பெற்றிருந்தார் என்று சொல்வதற்கில்லை. ஆனால் காவியங்கள், பக்தி இலக்கியங்கள் புராணங்களில் போதிய அறிவு பெற்றிருந்தார். சங்க கால ஔவையார், வீரத்தாய்மார்கள் பற்றி எழுதியுள்ளார். பக்தி இலக்கியத்தின் செல்வாக்கை அவரது பாடல்களில் காணலாம். திருவள்ளுவர், இளங்கோ, கம்பர் பற்றியும் எழுதியுள்ளார்.

வள்ளலாரின் புரட்சிக் கருத்துக்கள் பாரதியின் மேல் அதிகத்தாக்கம் கொண்டன எனலாம். சமயவாதிகள் புரட்சிகரமான புதுமைக் கருத்துக்களைக் கூறுவது உண்டு. எடுத்துக்காட்டாகப் பசவண்ணரைக் குறிப்பிடலாம். பசவண்ணர்,

"பெண்களையும் ஆண்களோடு அமரவைத்து லிங்கம் அணிந்து கொள்ளச் செய்தார். கைம்பெண் மணத்தை பாராட்டினார். திருமணத்தில் பெண்ணின் இசைவைப் பெறுவது தலையானது, என்றார். மணவிலக்கையும் ஆதரித்தார். பெண்கள் வீட்டு விலக்கமுறும் நாட்களில் தூய்மை அற்றவர்களாகவும் தீண்டப்படாதவர்களாகவும் நடத்தப்படுதலை அவர் கண்டித்தார்."[14]

பசவண்ணரின் கருத்துக்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றாலும் நவீன காலத்துப் பெண்ணியக் கருத்துக்களாக அவை மிளிர்கின்றன. பசவண்ணரைப் போலவே இராமலிங்கர் கருத்துக்களும் புரட்சிகரமானவையாகும். வள்ளலார், திருமணத்தை ஆடம்பரமாக நடத்தாமல் எளிமையாக நடத்த வேண்டும் என்றதையும் நகைப்பித்து கூடாது என்பதையும், காது மூக்குக் குத்துதல் ஆகியவற்றையும் பொய்ச்

சாத்திரங்கள், போலிச் சடங்குகளையும் எதிர்த்து எழுதியுள்ளார். பாரதி வள்ளலாரின் சமரச சன்மார்க்கத்தை ஏற்று, எல்லா மதங்களையும் கடவுளரையும் ஒன்றே, ஒன்றின் பல வடிவங்களே என்று கூறுகிறார்.

### 2.11.2. வடமொழிப்புலமை

பாரதி, சமஸ்கிருதம் நன்கு அறிந்து அதில் புலமை பெற்றவர். வேதங்கள், உபநிடதங்களில் கற்றுத் தோய்ந்தவர். பகவத் கீதையைத் தமிழில் மொழிப் பெயர்த்ததோடு அதற்கு ஆராய்ச்சி உரையும் எழுதினார். பாஞ்சாலி யோக சூத்திரத்திற்கும் உரை கண்டவர் பாரதியார். தரும சாஸ்திரங்களையும் ஸ்மிருதிகளையும் பாரதியார் படித்து அறிந்தவர். வேதங்களையும் உபநிடதங்களையும், அவற்றை ஆக்கிய பண்டைய முனிவர்களையும் பாராட்டிய பாரதியார் பிற்காலப் புராணங்களையும், மூடத்தனமான சாஸ்திரங்களையும் செல்லரித்துப் போனவை என்று கண்டனம் செய்தார். பெண்ணியத்தைப் பொறுத்த வரையில் குழந்தை மணம், கைம்மை நோன்பு, சதி போன்றவற்றிற்கு வேதங்களில் ஆதாரமில்லை என்றும், பின்னாளில் சாஸ்திரம் என்ற பேரில் குப்பைகள் தோன்றி, உண்மை சமயத்தை மறைத்து விட்டன என்றும் எழுதினார்.

### 2.11.3. ஆங்கில அறிவு - விட்மன் ஷெல்லி

பாரதி ஆங்கிலம் நன்கு கற்றவர். அதில் எழுதும் ஆற்றலும் உள்ளவர். மேலைநாட்டு ஆங்கில இலக்கியங்களை மூலத்தில் படித்து உணர்ந்தவர். லயோநெல்கிப்ஸ் என்பவர் எழுதிய, சீனப்பெண் சியூ-சின் என்பவரின் வரலாற்றையும், அவளின் சொற் பொழிவையும் தமிழில் மொழி பெயர்த்து எழுதியுள்ளார்.

டாட் என்ற ஆங்கிலேயர் எழுதிய ராஜஸ்தானத்து வரலாற்றையும், T. வியர் என்பவரின் நூலைப்பற்றியும் அவர் எழுதிய திபெத், பர்மா சயாம், நாட்டுப் பௌத்த பெண்களைப் பற்றியும் அமெரிக்கப் பத்திரிகையான பிரையான், மாஞ்செஸ்டர், கார்டியன் முதலியவற்றிலிருந்தும் மேற்கோள்கள் காட்டுகிறார்.

ஆங்கில இலக்கியத்தில் அமெரிக்காவின் ஜனநாயகக் கவிஞன் வால்ட் விட்மன், பைரன், கீட்ஸ், ஷெல்லி ஆகியோர் படைப்புகளை நன்கு படித்துப் புலமை பெற்றுள்ளார். ஷெல்லி மீது உள்ள ஈர்ப்பால், தம் புனைப் பெயராக 'ஷெல்லி தாசன்', என்பதைக் கொண்டவர்.

ஜான்கீட்ஸ் தாக்கத்தைப் பாரதி பாடிய, 'குயில் பாட்டில்' காணலாம் என்பர். கீட்ஸின் இயற்கை அழகு உணர்வையும். வோர்ட்ஸ் வொர்தின் இயற்கை பற்றிய பாடல்களின் செல்வாக்கையும் பாரதியார் பாடல்களில் காணலாம்.

ஆங்கிலேயக் கவிஞர் பைரன் சுதந்திரம், சமத்துவம். சகோதரத்துவம் ஆகியவற்றைப் பாடிய விடுதலைக் கவிஞன் எனப்படுபவர். அவரது தாக்கத்தைப் பாரதியிடம் காணலாம்.

பைரன் எழுதிய Isless of Grace', என்னும் கிரேக்கத் தீவுகள் என்ற பாடலின் பிரதிபலிப்பைப் பாரதியாரின் பாரத தேசம் பற்றிய பாடல்களில் காணலாம். கிரேக்க நாடு முன்பு பெற்றிருந்த பெருமையையும் இன்று தாழ்ந்துபட்டுக் கிடக்கும் துயர நிலையையும் பைரன் பாடுவதை அப்படியே பின்பற்றிப் பாரதி, பாரததேசத்தின் பண்டைய பெருமையையும் இந்நாளைய சிறுமையையும் பல இடங்களில் பாடுகிறார்.

அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன் (கி.பி. 1819) பேரறிஞன், சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை, மனித நேயம், பெண் விடுதலை, போன்றவற்றைப் பாடியவன். விட்மனது புல்லின் இதழ்கள் (Leaves of Gross) என்னைப் பற்றிய கவிதை ஆகியன புகழ் வாய்ந்த கவிதைகள் ஆகும்.

பாரதி, வால்ட் விட்மனைப் பற்றி, நகரம் என்ற கட்டுரையில், 'குடியாட்சி' ஜனாதிகாரம் என்ற கொள்கைக்கு மந்திர ரிஷிகளில் ஒருவராக இந்த வால்ட் விட்மனை ஐரோப்பிய ஜாதியார் நினைக்கிறார்கள். எல்லா மனிதரும் ஆணும் பெண்ணும் குழந்தைகளும் எல்லாரும் சமானம் என்ற சத்யத்தைப் பறையடித்த மகான்களில் இவர் தலையானவர். இந்த மகான் ஒரு நகரத்தைக் கற்பனை பண்ணுகிறார். அந்த நகரத்தில் ஆணும் பெண்ணும் சபதத்தில் துஞ்சார். அங்கே அடிமையில்லை ஆண்டையுமில்லை. அங்கே பெண்கள் வீதிகளில் ஆண்களைப் போலவே கூட்டங்கூடி ஊர்வலம் வருகிறார்கள். அங்கே பொதுக்கூட்டங்களில் பெண்களும் ஆண்களும் நிகரான இடம் பெறுகிறார்கள். எல்லாருக்கும் விடுதலையும் சமத்துவமும் உள்ளதாகிய நகரம்', என்று எழுதிச் செல்கிறார். பாரதி குடியாட்சி, ஆண் பெண் சமத்துவம், விடுதலை ஆகிய பண்புகளை விட்மனிடம் கண்டு போற்றியுள்ளார்.'[15]

விட்மனைப் பின்பற்றி பாரதி, சுயசரிதை பாடினார் என்பர். 'என்னைப் பற்றிய பாட்டு' என்ற விட்மனின் கவிதையின் போக்குகள் பாரதியின் சுயசரிதையில் உள்ளன. மேலும் விட்மனின் வசன கவிதையைப் பின்பற்றிப் பாரதி வசனகவிதைகள் எழுதினார்.

பெண்மையைப் போற்றுவதிலும் பெண்ணியக் கருத்துக்களிலும் விட்மனின் செல்வாக்கைப் பாரதியில் காணலாம். விட்மன் பெண்ணைப் புனிதமானவளாகக் கருதி, 'தாயின் சிறந்தது எதுவுமில்லை எனக் கூறுகிறேன்'. என்றான். பாரதியும் 'பெற்ற தாயும் நற்றல வானினும் நனி சிறந்தவள்' என்றார். விட்மன் புல்லின் இதழ்கள் என்ற கவிதை நூலில், 'நீங்கள் வெட்கப்படவேண்டியதில்லை' என்றும், 'உங்களது வாய்ப்புகள் பறிமுதல் செய்யப்பட்டன என்று கவலை கொள்ள வேண்டாம்', என்றும் 'உடல் ஆன்மா ஆகியவற்றின் வாசற்கதவுகளாக நீங்கள் திகழ்கின்றீர்கள் என்றும் பாடிச் செல்கிறார். விட்மனின் மேற்கூறியன போன்ற பல பாடல்களின் பாதிப்பினைப் பாரதி பாடல்களில் காணலாம். பாரதியும் விட்மனும் படைத்த புரட்சிப்பெண் பாத்திரங்கள் சமுதாயப்பணிகள் ஆற்றுவதிலும் சமுதாய வாய்ப்புகளை அனுபவிப்பதிலும் நிகராகத் திகழ்கின்றனர். இதைத்தவிர அமெரிக்க நாட்டுப் பெண்ணுரிமைப் போராட்டத்தின் லட்சியங்களின் பிரதிப்பலிப்புடைய வால்ட் விட்மனின் தாக்கம் பாரதியின் படைப்புகளில் காணக் கிடைக்கின்றன."[16]

ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிஞன் 1792-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்து பாரதியைப் போலவே இளமையில் மறைந்தவன். பாரதி வாழ்ந்த காலம் 39 ஆண்டுகள் ஷெல்லியோ 29 ஆண்டுகள் தாம். ஷெல்லி எல்லாவகையான அடக்கு முறைகளையும் அநீதிகளையும் எதிர்த்துப் போராடியவர். ஷெல்லியின் பெண் விடுதலைக் கருத்துக்கள், பாரதியில் பெரிதும் இடம் பெறுகின்றன. 'பெண் அடிமையாக இருந்தால் ஆண் சுதந்திரம் பெற முடியுமா? என்ற ஷெல்லியின், இஸ்லாமின் புரட்சி என்ற காவியத்தில் வரும் வரியைப் பாரதி, பாரத குமாரிகள் என்ற கட்டுரையில்

எடுத்தாண்டுள்ளார் பாரதியின், 'புதுமைப்பெண்' பற்றிய பாத்திரப்படைப்பில் ஷெல்லியின் புதுமைப்பெண் பற்றிய லட்சிய எண்ணங்கள் இழையோடுகின்றன. ஷெல்லியின் 'இஸ்லாமின் புரட்சி'யின் நாயகி சித்னாவும் பாரதியின் புதுமைப்பெண்ணும் பல வகைகளில் ஒப்புமை உடையவர்களாக உள்ளனர். பெண் விடுதலை, உரிமைக்குப் போராடுதல், மூடநம்பிக்கைகளை ஒழித்தல், ஆண் பெண் சமத்துவம், கல்வியறிவு, எதிர்கால லட்சிய சமுதாயம் படைத்தல், அஞ்சாமை, நேர்மை, நாட்டுப்பற்று எனப் பலவகைகளில் ஒப்புமை காணலாம். பாரதியின் காதல் பற்றிய கருத்துக்களும் ஷெல்லியின் தாக்கத்தைப் பெற்றுள்ளன. இரண்டு ஆத்மாக்களின் ஒன்றலே காதல் என்ற தத்துவத்தை, 'The Philosophy of Love'. காதலின் தத்துவம் என்ற கவிதையில் ஷெல்லி பாடியதைப் பாரதி கண்ணம்மாவின் காதலிலும் குயில் பாட்டிலும் எடுத்தாண்டுள்ளார்.

பாரதியின் நிரம்பிய ஆங்கில அறிவு பெண்ணியம் பற்றிய அமெரிக்க ஐரோப்பியக் கருத்துக்களை அறிய உதவியது.

## 2.12. பாரதியார் வாழ்க்கை

பாரதியார் கி.பி. 1882-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ஆம் தேதி எட்டையபுரத்தில் சின்னசாமி ஐயருக்கும் லட்சுமி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். எட்டையபுரத்திலும், திருநெல்வேலி இந்து கலாசாலையும் படித்தார்.

1897-இல் பாரதிக்கும் செல்லம்மாவுக்கும் திருமணம் நடந்தது. அடுத்த ஆண்டில் தந்தையார் இறந்தார்.

1899 முதல் 1901 வரையில் காசியில் அத்தை குப்பம்மாள் வீட்டில் தங்கிப் படித்தார். அலகாபாத் சர்வகலாசாலை நுழைவுப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். மீண்டும் எட்டைய புரம் வந்தார். அங்கு ஜமின்தாரின் தோழராகவும் சமஸ்தானத்துப் புலவர்களில் ஒருவராகவும் இருந்தார்.

1904 ஆகஸ்டு முதல் நவம்பர் வரை மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக வேலை பார்த்தார். பின் நவம்பர் மாதத்தில் சென்னைக்கு வந்து சுதேசமித்திரன் உதவி ஆசிரியராக இருந்தார்.

1905-இல் கல்கத்தாவுக்கு அருகில் நிவேதிதா தேவியைச் சந்தித்தார். 'சக்ரவர்த்தினி' என்ற பெண்கள் முன்னேற்றப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார். காசிக் காங்கிரஸ் மாநாட்டிலும் கலந்து கொண்டார்.

1906-ஆம் ஆண்டு புரட்சி வாரப் பத்திரிகை இந்தியாவைத் தொடங்கினார். கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் ஆசாரத் திருத்த சபையின் தமிழ்நாட்டின் பிரதி நிதியாகக் கலந்து கொண்டார்.

1907- டிசம்பரில் சூரத் காங்கிரசுக்குச் சென்றார். அங்கு திலகரைச சந்தித்தார். அரவிந்தர், லாலா லஜபதிராய் ஆகியோரும் சூரத்தில் பழக்கமானவர்களே.

1908 இல் பாரதி ஆங்கில அரசு கைது செய்யலாம் என்பதைத் தவிர்க்கப் புதுச்சேரி சென்றார். அங்கு வ.வே.சு.ஐயர், அரவிந்தர் ஆகியோர் வந்து சேர்ந்தனர். பாரதிதாசன், வ.ரா. குள்ளச்சாமி, குவளைக் கிருஷ்ணன் ஆகியோருடன் பழகிவந்தார். வ.உ.சியும் புதுவை வந்து போனார்.

1918-ல் மீண்டும் இந்தியா திரும்பினார். கைதாகி விடுதலை பெற்றார்.

1918 -லிருந்து 1920 வரை கடையம் கிராமத்தில் வசித்தார். 1920-இல் மீண்டும் சென்னைக்கு வந்து சுதேசமித்திரனில் பணியேற்றார்.

1921-இல் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானையால் தாக்குண்டார். நோய்வாய்ப்பட்டார். செப்டம்பர் 12-ம் தேதி இயற்கை எய்தினார்.

## 2.13. பாரதியின் பெண்ணியப் பார்வை

பாரதியார் கவிதை, கதை, கட்டுரை முதலிய மொழி வடிவங்களைக் கையாண்டு பெண்ணுரிமை பற்றிய புதிய கருத்துக்களை வலியுறுத்த மிகவும் முயன்றுள்ளார். பாரதியார் 'பெண்விடுதலையின் பொருட்டாகத் தர்மயுத்தம் தொடங்குங்கள்;' என மக்களை அழைத்துள்ளார். மனித இனத்தின் சரிபாதியாக விளங்கும் பெண்கள் மேல் ஆண் மேலாண்மைச் சமூகம் சுமத்திய அனைத்து கொடூரங்களையும் உணர்ந்து எழுதியுள்ளார். சமூகத்தில் பெண்ணடிமை நிலை பெற்றதற்கு ஒரு காரணம் ஆணைச் சார்ந்து வாழும்படியாகப் பொருளாதாரச் சுதந்திரம் அற்றவளாக ஆக்கிய சமூக அமைப்புத்தான் எனச் சுட்டிக் காட்டுகிறார். பெண்ணை உரிமையற்றவளாகவும், உடைமையற்றவளாகவும் ஆக்கியது தான் பெண்ணை வீழ்ச்சி அடைய வைத்தது.

பெண்ணடிமைத் தனத்தின் மற்றொரு கூறு அவளது நடமாட்டத்தை - இயங்குதளத்தை - எல்லைக்கு உட்படுத்துவது. மேலும் அவளை எப்பொழுதும் கண்காணிப்பிற்குள் வைத்திருப்பது. பெண் ஆணைவிட உடல் வலுவிலே

இயற்கையிலே தாழ்ந்தவள். அறிவு வளத்தில் குறைந்தவள். எனவே அவள் தகுதிக்கு ஏற்ப ஒடுங்கி இருக்க வேண்டும். விளிம்பு நிலையில் தான் அவள் வாழ்க்கை அமைய வேண்டும். பாரதியார் இத்தகு காலச் சூழலை எண்ணிக் குமுறினார். பெண் விடுதலைக்குப் பாடுபட்டார். பெண்ணினம் ஆண்டாண்டு காலமாக அடிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையிலிருந்து எழுச்சிப் பெற்றுச் சமமாக வாழ்வதைச் சகிக்க முடியாத ஆதிக்க வாதிகளைக் கடுமையாகச் சாடினார். உண்மையில் ஆணைவிடப் பெண்தான் அணுவளவு உயர்வாகக் கருதத்தக்கவர் என வாதாடுகிறார். அன்றே தம் கதையில் வரும் பாத்திரத்தைக் குறிப்பிடுகையில் "வேதவல்லியார் வந்தனர் என்று உயர்வுப் பன்மையில் பெண்ணைக் குறித்து எழுதிவிட்டு அடைப்பிற்குள் ஒருமை, பன்மை இரண்டும் பெண்களுக்கு உயர்வையே காட்டும் என்று குறித்து, 'உட்கார்ந்தாள்' என 'அள்' விகுதி போட்டு எழுதுகிறார். ஆணைக்குறிக்கும் போது 'பெண் உயராவிட்டால் ஆண் உயராது' என அஃறிணையில் குறிப்பிட்டு பேசுகிறார்."[17] "நத்தைப் புழுவைப் போல ஆணும் பெண்ணும் கூடப் பிறக்கிறோம் இதில் உடன் பிறந்தவன் ஆண்டான்' உடன் பிறந்தவள் அடிமை, ஸ்வாமி, சுத்தபாமர ஜனங்கள்"[18] என்று சமூகத்தின் எண்ணத்தைச் சாடுகிறார்.

திருமண உறவிலுள்ள பதிவிரதை, கற்பு, கைம்பெண் நிலை, குழந்தை மணம், மணவிலக்கு போன்ற அனைத்துக் கூறுகளையும் எண்ணிப் பார்த்துச் சமூகம் பெண்மைக்கு இழைத்து வரும் அநீதியைத் தம் படைப்புகளில் சுட்டிக் காட்டியுள்ளார். "பெண்களுக்கு விடுதலை உண்டானால் ஒழிய விவாக சம்பந்தமான 1008 ஊழல்கள் நீங்க வழியில்லை"[19] என்று உரைக்கிறார்.

பெண் விடுதலைக்குப் பாரதியார் பெண்களுக்குக் கூறும் தீர்வு கல்வி ஒன்றுதான் என்கிறார். "வேரிலே விட்ட ஜலம் மாதிரி கல்வி"[20] என்கிறார். பெண்களுக்கு அடுத்து சொல்லும் கருத்து 'துணிவுடைமை' ஆகும். "வெட்கம் பயம் என்ற பேய்களைத் தைரிய வாளால் வெட்டி வீழ்த்தி விட்டு வெளியே வாருங்கள்,"[21] என்று அழைக்கிறார். "தமிழ் மாதர்களே! மனம் சோர்ந்து விடாதீர்கள், உங்களுக்கு நல்ல காலம் வருகிறது, வந்துவிட்டது. நீங்கள் விடுதலை பெறுவீர்கள். உங்களால் உலகம் மேன்மையுறும்!"[22] என நம்பிக்கை ஒளி பாய்ச்சுகிறார்.

## 2.14. *பாரதியாரின் அரசியலறிவு*

அரசியல் என்ற சமூக விஞ்ஞானம் அரசு என்பதைப் பற்றியதாகும். நாடு என்பதின் இன்றியமையாத ஆக்கக் கூறுகளாக மக்கள் (population) மக்கள் வாழும் வரையறுத்த எல்லைப்பரப்பு (Territory) அரசாங்கம் (Government) இறைமை (Sovereignity) ஆகிய நான்கும் அமைந்துள்ளன.

இவற்றுள் மக்கள் தொகுதியைப் பொறுத்த அளவில் எண்ணிக்கை எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்குத் தகுதியும் பண்பும் முக்கியமானவைகளாகும். ஒரு நாட்டின் மக்களின் தரம் உயர்ந்து இருத்தல் வேண்டும். மக்கள் தொகையின் ஒரு பாதியான பெண்கள் தகுதி மிக்கவர்களாக விளங்குதல் வேண்டும். பெண்களை அடிமைகளாக்கிக் கல்வி அறிவு அற்றவர்களாகச் செய்து இருட்டில் தள்ளிவிடும் நாடு முன்னேறாது என்பதைப் பாரதி கூறுவதுடன் பெண்கள் விடுதலை பெற்று எல்லாவகையிலும் தகுதியுடைய குடிமக்களாக வாழச் செய்ய வேண்டும்

என்றும் கூறுகிறார். பாரதி நாட்டுப்பற்றுடைய பெண்களை உருவாக்க முயல்கிறார். நாட்டின் எல்லைப் பரப்பு என்பது மண்ணும் மலையும் ஆறும் காடும் கழனியும் கொண்டது. இந்த மண்ணை இந்த மண்ணில் வாழும் மக்களை நேசிப்பதும் போற்றுவதும் நாட்டுப்பற்று ஆகும். பாரதியார் நாட்டுப்பற்றுடைய பெண்களிடம் விடுதலைப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கிறார். பாரதியார் இந்திய நாட்டில் குடிமக்கள் ஆட்சியாகிய ஜனநாயகத்தைப் போற்றுகிறார். எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்பது அவரது சித்தாந்தம். ஆண்கள் எல்லாம் இந்நாட்டு மன்னர் என்றால் பெண்கள் அரசிகள் ஆவர். உரிமை சமத்துவம் சகோதரத்துவம் ஆகியன கொண்ட குடியரசு பாரதியின் லட்சியம் ஆகும். எனவே பெண்களுக்கு உரிமையும் சமத்துவமும் வேண்டும். பெண்கள் ஆண்களுடன் மட்டுமின்றிப் பெண்கள் பெண்களுடனும் சகோதரித்துவத்தை மேற்கொள்ள வேண்டும் என்கிறார் பாரதியார்.

## 2.15. *பாரதியின் சமூக அறிவு*

பாரதி இந்தியச் சமூகம் சமத்துவம் உடையதாகவும் சாதி பேதம் அற்றதாகவும் எல்லாவகையான அறியாமைகளும் நீங்கி அறிவொளி பெற்றதாகவும் ஜாதி-மத- இன பேதமற்ற சகோதரத்துவம் உடையதாகவும், ' இந்தியர் எல்லோரும் ஓர் குலம் ஓர் நிறை' என்ற தேசிய ஒருமைப்பாடு உள்ளதாகவும் இருத்தல் வேண்டும் என்கிறார். மேற்கூறிய பண்பு, ஆண் பெண் ஆகிய இருபாலருக்கும் பொதுவாகும். இதுவே பாரதியின் லட்சியம் ஆகும். பெண்கள் சமூக ஆக்கப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று விழைகிறார்.

பாரதியார் சமூகத்தில் வர்க்கமுரண்பாடு அற்றநிலை வேண்டும் என்கிறார். ரஷ்ய நாட்டு பொதுவுடைமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பெண்களுக்கான கல்வியில் கைத்தொழில்களைக் கற்பித்தல் வேண்டும் என்கிறார். பெண்கள் பல்வேறு பணியிலும் தம் ஆற்றலை நிறுவ வேண்டும் என்கிறார். பெண்கள் ஆடம்பரம் நகைப்பித்து ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும் என்கிறார்.

## 2.16. பாரதியின் அழகியல் உணர்வு

பாரதி அழகியல் உணர்வுடையவர். அழகைப் போற்றுபவர். இவ்வுலகில் எல்லாம் அழகுடையன எனப்போற்றுபவர், கடலும் மலையும் காக்கையும் குருவியும் ஆகிய எல்லாப் படைப்புகளிலும் அழகு உண்டு. நன்மை, இன்பம் தரும் எனலாம் அழகுடையன. பெண்ணோ அழகின் வடிவம் என்கிறார். பாரதியார் பெண்மையை அழகுத் தெய்வம் என்று போற்றுகிறார்.

## 2.17. சமயத் தத்துவம்

பாரதி இந்து சமயத்தையும், அதன் உட்பிரிவுகளான அத்வைதம், விசிஷ்ட அத்வைதம், துவைதம், சைவம், வீரசைவம், பரமாத்வைதம் முதலியவற்றை நன்குணர்ந்தவர். வடமொழியில் வேதம், உபநிடதம், பகவத்கீதை முதலிய அனைத்தும் கற்றுத் தேர்ந்தவர். சக்தி வழிபாட்டை மேற்கொண்டவர்.

பாரதி இஸ்லாம்மதம், அதன் தத்துவம், முகம்மது நபி, திருக்குர்ஆன், சமய நம்பிக்கைகள் பற்றியும் அறிந்தவர். பௌத்தம், சமணம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களின் அறிவையும் பெற்றவர்.

பாரதி எல்லாச் சமயச் கடவுளரையும் பெயரிட்டுக் கூறி அனைத்தும் ஒரே உண்மைப் பரம்பொருளின் தத்துவத்தின் வெவ்வேறு பெயரால் அமைந்த பல கூறுகள் என்னும் அடிப்படையில் ஒன்றே என்றும் கூறுகிறார். எல்லாம் ஒரே சக்தியின் பல்வேறு அம்சங்களாகும்.

ஆன்மீகப் பெண்ணியம் சக்தி வழிபாடான பெண் தெய்வ வணக்கத்தைப் போற்றி முன் வைக்கிறது. பாரதி பெண்களைச் சக்தியின் அவதாரம் என்று கூறுவதோடு தாய், மனைவி, மகள், சகோதரி ஆகிய அனைவரையும் தெய்வமாகவே போற்ற வேண்டும் என்கிறார். பெண்ணால்தான் அறங்கள் வளர்கின்றன. அறம் வளர்க்கும் பெண்கள் விடுதலை பெற்று கல்வி கற்று மேன்மையடைய வேண்டும். இல்லறமும், சமூக அறமும், தேச அறமும் மேன்மையுடைய பெண்கள் நல்லறங்கள் போற்றி, அறச் செல்வியராய் விளங்க வேண்டும் என்பது பாரதியார் நோக்கமாகும்.

## 2.18. பாரதியின் காலச்சூழல்

பாரதி வாழ்ந்த காலம் விடுதலைக் கெட்டு பாழ்பட்டு நின்ற காலம். 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்று பெண்ணை வீட்டுக்குள்ளே பூட்டி வைத்த காலம். ஆணாதிக்கம் மிகுதியாக இருந்த காலம், இளமை மணத்தாலும், கைம்பெண் நிலைக் கொடுமையாலும், பெண்கள் துன்புற்றக் காலம், பெண்ணியச் சிந்தனை அந்நியமான காலம். எண்ணியும் பார்க்க முடியாத காலம். பழமையில் ஊறித்தேங்கிக் கிடந்த சமூகத்தை மாற்ற வேண்டிய காலத்தின் தேவையைப் பாரதியார் உணர்ந்திருந்தார். இந்தியப் பெண்கள் கட்டுப்பாடுகளை அறுத்து எறிந்து வீட்டை விட்டு வெளியேறி

உரிமையுடன் அரசியல், சமூக சமயப் பொருளாதாரக் கல்வி நிலைகளில் உயர்ந்து சரிநிகர் சமானமாக வாழவேண்டும் என்று பாடுபட்டார். பாரதியார் புதியதோர் உலகமான கிருயுகத்தில் புதுமைப் பெண்களைப் பாரதி உலவ விட்டார்.

பாரதியார் பெண்ணிய சிந்தனை குறித்து நிரம்ப அறிந்தவர். பாரதிக்குப் பலமொழிகள் தெரியும் ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி. வங்காளி. பிரஞ்சு ஆகிய மொழிகளை அறிந்தவர். ஆங்கில அறிவின் மூலம் மேலைநாட்டுப் பெண்ணியக் கருத்துக்களைப் பாரதியார் அறிந்திருந்தார்.

பாரதியாருக்கு உலகளாவிய அரசியல் சமுகக் கருத்துக்களையும் நடைமுறைகளையும் அறிய அவரது இதழியல் பணி வாய்ப்பளித்தது.

பெண்கள் முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்ட நிறுவனங்கள் தனிநபர்கள் ஆகியோருடனும் அவருக்குத் தொடர்புகள் இருந்தன. தமிழ் இலக்கியத்திலும் தமது அறிவைப் பாரதியார் பெருக்கிக் கொண்டிருந்தார். தம் காலத்து நிலவிய பல்வேறு இயக்கங்களோடு பெண் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டு எழுதிய சான்றோர்களோடு தொடர்பு கொண்டிருந்தார் பாரதியார். கவிஞர் மட்டுமல்லர் அவர் அரசியல் விடுதலைப் போரட்ட வீரர். சமுக சீர்த்திருத்தவாதி, தத்துவ அறிஞர், கலைஞர், பத்திரிகையாளர், பன்மொழியாளர். இத்தகு பன்முக ஆளுமைத்திறன் கொண்ட பாரதியார் பெண்ணியம் போற்றியது வியப்பில்லை.

## 2.19. தொகுப்புரை

பெண்களைப் பற்றிய தவறான சமுதாயப் பார்வையை மாற்றியும், அடிப்படை பண்பாட்டைப் பின்பற்றியும் பெண்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, அவர்களை வாழ்வாங்கு வாழவைக்க வேண்டும்.

பெண்ணை மனிதத்தின் ஒரு பகுதி என்று உணர்வு ரீதியாக ஆராய்ந்து நியாயமான உரிமைகள் உணர்வுகள் கிடைக்கப் போராடினால் மட்டுமே ஆக்கப்பூர்வமான, பயனுள்ள பெண்ணியக் கோட்பாட்டை உருவாக்க முடியும்.

பெண்ணிய வாதிகள் பெண்ணையும், பெண் சார்ந்திருக்கும் குடும்பம், சமூக அமைப்பு பண்பாட்டுச் சூழல், உடல் கூறு, உணர்வுக் கூறு ஆகியவற்றின் வழிநின்று ஆராய்வதே பெண்ணுரிமை பிரச்சனைக்குத் தீர்வாகும்.

வளர்ந்து வரும் பெண்ணியம் இன்று கிராமப் புறங்களிலும் பல்வேறு சங்கங்கள் வாயிலாகப் பரவி கிராமப்புற பெண்களையும் விழிப்படையச் செய்து வருகிறது.

பெண்கள் அடக்கப்படுவதையும் ஒடுக்கப்படுவதையும் தடுப்பதும், ஆண்களுக்கு நிகரான சமூக மதிப்பை அனைத்துத் துறைகளிலும் பெறச் செய்வதுமே பெண்ணியத்தின் நோக்கமாகக் கருதப்படுகின்றது.

பெண்கள் பற்றிய இழிவான சமூக மதிப்பு மாறுவதற்கும், பெண்ணுரிமை மறுதலிப்புக்களைத் தடுக்கும் பெண்ணியச் சித்தரிப்புகள் பெரிதும் துணைபுரிகின்றன.

பெண்கொடுமைகள் பற்றிய காட்சிகள் இவர்கள் மேல் இரக்கத்தை ஏற்படுத்தி இவ்வாறு நடத்துவது தவறு என்ற உணர்வினை உருவாக்குகின்றன.

ஆணாதிக்கத்தினை அடையாளங்காணவும் உதவுகின்றன. பெண்ணுயர்வு பற்றிய காட்சிகள் பெண்ணுரிமையின் தேவையையும் பெண்களிடையே தமது உரிமைகள் பற்றிய விழிப்புணர்வையும் வற்புறுத்துகிறது.

21-ஆம் நூற்றாண்டிலாவது பெண்ணியச் சிந்தனைகள், சிக்கல்களைத் தீர்க்கக் கூடியதாய் அமைத்தல் வேண்டும்.

பாரதியார் பன்முகத் தன்மை கொண்டவர். பல்வேறு நூல்களின் ஆசிரியர். பெண்ணியச் சிந்தனை குறித்த தெளிவான அறிவும் பெண்கள் பால் பரிவும் பெண்ணியச் செயல்பாடுகளும் கொண்டவர். சக்தி உபாசகராக இருந்தவர். அரசியல், சமூகப் பொருளாதார, சமயத் தத்துவங்கள் அனைத்தும் அறிந்தவர். வடமொழி, ஆங்கில மொழி அறிந்தவர். மேலை இலக்கியப் பெண்ணியச் சிந்தனை அறிந்தவர். தமிழ் இலக்கியங்களிலும் கற்றுத்துறை போகியவர். எனவே பெண்ணியக் கருத்துக்கள் பாரதியாரிடம் மிகுந்து காணப்படுகின்றன.

## குறிப்புகள்

1. அ. ஜெய்குமார் , பெண்களும் சமூகமும், ப.8.

2. வாசுகி ஜெய ரத்தினம், பெண்ணியம் - ஒரு விளக்கம் முப்பத்தோராம் கருத்தரங்க ஆய்வுக் கோவை, ப.153.

3. Encyclopedia Britaniea - Vol.1, P.154.

4. தேவதத்தா. (ப.ஆ) தமிழ்ச் சிறுகதைகளில் பெண்கள் பிரச்சனைகள், ப.7.

5. இரா. பிரேமா, பெண்ணியம் - அணுகுமுறைகள், ப.18.

6. மேலது. பக். 17,18.

7. மேலது. ப. 18.

8. மேலது, ப.18.

9. மேலது. பக். 19,20.

10. மலர்விழி மங்கையர்கரசி. இரா., ஆன்மீகப் பெண்ணியம், முப்பத்தோரம் கருத்தரங்க ஆய்வுக் கோவை, ப.133.

11. பா. சங்கீதா, கவிஞர் கண்ணதாசனின் - ஸ்வாண சரஸ்வதியில் பண்பாடு பெண்ணியம், முப்பத்திரண்டாம் கருத்தரங்க ஆய்வுக்கோவை, ப.516.

12. இரா. மலர்விழி மங்கையர் கரசி, ஆன்மீகப் பெண்ணியம், முப்பத்தோராம் கருத்தரங்க ஆய்வுக் கோவை, ப.1315.

13. க. திலகவதி, சமுதாய மாற்றமும் மகளிரும், முப்பத்திரண்டாம் கருத்தரங்க ஆய்வுக் கோவை, பக். 903,904.

14. கு.வே. பாலசுப்பிரமணியன், தத்துவதரிசனம் வீர சைவம், ப.282.

15. முனைவர். க. கைலாசபதி, பாரதி ஆய்வுகள். 1987, ப.51.

16. ஜான் சாமுவேல், ஷெல்லியும் பாரதியும். ஓர் புதிய பார்வை, ப.381.

17. முனைவர். க. பஞ்சாங்கம், பாரதியாரின் பெண்ணியக் கட்டுரைகள்.

18. முனைவர். க. பஞ்சாங்கம் (தொ.ஆ) பாரதியாரின் பெண்ணியக் கட்டுரைகள், பக்.105-110.

19. மேலது, ப.75.

20. மேலது, ப.110.

21. மேலது, ப.120.

22. மேலது, ப.112.